Registered as a Newspaper in Sri Lanka

# ஈழமுரசு

முரசு 2 24-2-1985 ஞாயிற்றுக்கிழமை (மாசி 13 - ஐ ஆகிர் 3) முழக்கம் 20

## முடமாவடியில் நேற்று மாலை சூடு; தீவைப்பு; கடும் தாக்குதல்!

கல்வியங்காட்டிலிருந்து சட்டநாதர் வீதி, கோவில் வீதி வழியாக வாகனங்களில் ஆயுத பாணிகளாக வந்தவர்கள் முடமாடிச் சந்தியில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் மரணமானதாகவும், மற்றவர் காயமடைந்ததாகவும் தெரிய வந்துள்ளது. இருவரையும் அவர்கள் தங்கள் வாகனத்திலேயே ஏற்றிச் சென்றனராம். இப்பகுதியால் வந்த பலரும் பலமான தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்தனர். மோட்டார் சைக்கிளொன்றும், பல சைக்கிள்களும் தீக்கிரையாக்கப்பட்டன. அம்புலி

— 8-ம் பக்கம் பார்க்க

★ குருநகர் இராணுவமுகாமுக்கு முன்னால் நேற்றுக்காலை 9 மணியளவில்

பல நூற்றுக் கணக்கான மக்கள் பார்த்து நிற்க

# வங்கி வாகனத்துடன் சேர்த்து 12 லட்சம் ரூபா துணிகர கொள்ளை

## ஆசிரியர்களும் பென்ஷன்காரரும் பணம் பெறாது வெறுங்கையுடன் வீடு திரும்பினர்

குருநகர் இராணுவ முகாமிலிருந்து சுமார் பன்னிரண்டு லட்சம் ரூபா ரொக்கப் பணத்துடன், முன்னாலுள்ள இலங்கை வங்கிக் கிளையை நோக்கி வந்த வங்கிக் கவச வண்டி, ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 9 மணியளவில் இத்துணிகரக் கொள்ளை இடம்பெற்றது. வாகனத்துக்குள்ளிருந்த சாரதியுடனும், சிற்றூழியருடனும் வண்டி கடத்தப்பட்டதாயினும் அவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பென்ஷன் பணம் பெறுவதற்காக கச்சேரி ஓய்வூதியகாரரும், சம்பளப் பணம் பெறுவதற்காக பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் வங்கி முன்னால் திரண்டு நின்று பார்த்துக் கொண்டிருக்கையில் இக் கொள்ளை நடைபெற்றது. இராணுவமுகாமிற்கு முன்னால் இச்சம்பவம் நடைபெற்றதாயினும் உடனடியாக கொள்ளையர்கள் பிடிபடமுடியாதவாறு தப்பிவிட்டனராம்.

வண்டிக்குள்ளிருந்த இலங்கை வங்கி உதவி மனேஜர் ஒருவரும், மற்றொரு அதிகாரியும், வங்கியின் பிரதான பாதுகாப்பு அதிகாரியும் துப்பாக்கி முனையில் கீழே இறக்கப்பட்ட பின்னர், பணத்துடன் சேர்த்து கவசவண்டி இளைஞர்களால் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற பத்து நிமிடத்துக்குள் பல பாதைகளாலும் ராணுவ வண்டிகளும், ஹெலிக்கப்டர்களும் சிதறி ஓடி தேடுதல் வேட்டையை நடத்தினராயினும் செய்தி அச்சுக்குப் போகும் வரை வாகனம் மீட்கப்படவில்லை.

வங்கி ஊழியர்கள் ஒன்பது பேர் நேற்று மாலை வரை ராணுவ விசாரணைக் குட்படுத்

—8 ஆம் பக்கம் பார்க்க

### ★ பிந்திய செய்தி

### ராஜீவ் நிராகரித்தார்

இலங்கை தெரிவித்த கடலோர கூட்டு ரோந்துத்திட்ட யோசனையை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி நிராகரித்து விட்டதாக நேற்றிரவு அறிவிக்கப் பட்டது

## இலங்கை அரசுக்கு உதவ ராஜீவ் காந்தி மறுப்பு!

இலங்கையில் பாதுகாப்புப் படையினர் அப்பாவித் தமிழ் மக்களைக் கொலை செய்து வருவதால் இந்தியா இலங்கைக்கு எந்த வழியிலும் உதவ முடியாது இருப்பதாக பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, அமைச்சர் அத்துலத் முதலியிடம் தெரிவித்துள்ளார்

மேற்கண்ட விபரம் 'லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்' சஞ்சிகைக்கு ராஜீவ் காந்தி அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''பயங்கரவாதிகள் கொலை செய்யப்படவில்லை. ஆனால் அப்பாவிகளே கொலை செய்யப்படுகிறார்கள் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இனப்படுகொலை நடைபெறும் நாட்டுக்கு உதவுவது கஷ்டம். இதனால் இலங்கைக்குஉதவக்கூடிய நிலையில் பாரதம் இல்லை'' என்று ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளதாக இங்கு மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீர்வேலியில் கடும் சோதனை மினிவான் முற்றாக எரிந்தது

(நீர்வேலி)

நீர்வேலிப் பகுதிக்கு நேற்றுக்காலை பல வண்டிகளில் சென்று ஒரு பகுதியை முற்றுகையிட்ட சீருடையினர் பலமான தேடுதல் வேட்டையையும், வீதிச் சோதனையையும் மேற்கொண்டனர்.

இப்பாதையால் வந்த சகல வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டன, அப்போது வானொன்றிலிருந்த நான்கு வாலிபர்கள் வயல் வெளியால் ஓடியதாகவும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியிலுள்ள வீடொன்றைச் சோதனையிட்டு வாலிபர் ஒருவரை விசாரணைக்காகக் கொண்டு சென்றதாகவும், இதனையடுத்து வானொன்று முற்றாகஎரிந்தநிலையில் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது,

### பலர் கைது

(கல்வியங்காடு)

இன்று பிற்பகல் கல்வியங்காட்டுப் பகுதியில் திடீர் சோதனை நடாத்திய சீருடையினர் சிலரை விசாரணைக்காகக் கொண்டு சென்றனர் சட்டநாதர் வீதி, செங்குந்தா வீதி, பருத்தித்துறை வீதி, புதிய செம்மணி வீதி ஆகிய இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டன.

## சுடப்பட்டதால் நான்கு பேர் மரணம்; எழுவர் காயத்துடன் ஆஸ்பத்திரியில்

நேற்றுக்காலை நடைபெற்ற வங்கிக் கொள்ளையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை ஆஸ்பத்திரி வீதியில் சூடுபட்டு மரணமான புஹாரி போரன்ஸ் (30) என்ற கராஜ் ஊழியரின் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு

— 8-ஆம் பக்கம் பார்க்க

## இருவரையும் விடுவிக்குமாறு கூட்டாக வேண்டுகோள்!

நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன், திட்டமிடல் பகுதி மேலதிக பணிப்பாளர் திரு. கிருபதிலகன் ஆகியோர் பற்றி எந்தத் தகவலும் பின்னர் கிடைக்கவில்லை.

திரு. ஞானச்சந்திரன் ஆறு

—8 ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பகுதி ஜீ.சி.ஈ. பரீட்சை மாணவர்கள் கவனத்திற்கு

(உடுப்பிட்டி)

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜீ சி. ஈ. சாதாரணதாப் பரீட்சைக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகியவற்றின் நிலையங்களில் தோற்றிய மாணவர்கள் இம்மாதம் 27-ம் திகதி நடைபெறும் விசேஷ

— 8-ஆம் பக்கம் பார்க்க

### அமைச்சர் மனைவி மரணம்

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும் கல்குடா தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான கே. டபிள்யு. தேவநாயகத்தின் பாரியார் திருமதி மகேஸ்வரி தேவநாயகம் நேற்றுக்காலை காலமானார். இறுதிச் சடங்குகள் இன்று ஞாயிறு மாலை நான்கு மணிக்குக் கனத்தை மயானத்தில் நடைபெறவுளது.

### 'ரெலோ'வின் பிரசுரம்:

## முரண்பாடுகளைத் துப்பாக்கி முனையில் தீர்க்க முடியாது!

தீவிரவாத இளைஞர்களில் ஒருவரான -நரு என்பவரது மரணம் தொடர்பாக ''முற்போக்கு வாத அணியின் மீது பிற்போக்குவாத விமர்சனம்'' என்ற பெயரில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

தமிழ் ஈழ தேசிய விடுதலை முன்னணியினரால் வெளியி

—8 ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி மாணவர்

## முன்னர் தோற்றாத பாடம் சகலதிற்கும் தோற்றலாம்

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் ஜீ. சி ஈ. பரீட்சைக்கு முன்னைய பரீட்சையின் போது மாணவர்கள் எந்தெந்தப் பாடங்களுக்குத் தோற்ற

—8 ஆம் பக்கம் பார்க்க

national weekly

வார மலர் விலை ரூபா இரண்டு

# இலங்கை - ஒரு நரகக்காட்சி

பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றுச் சரியாக முப்பத்தேழு ஆண்டுகளாகிவிட்டன நாட்டின் இரு இனங்கள் யுத்தத்திற்கென அணிவகுத்து நிற்கின்றன. ஒருபுறம் பெரும்பாலும் இந்து சமயினரான இருபத்தாறு இலட்சம் தமிழர்கள் அவர்களுக்கு எதிராக பெரும்பாலும் பௌத்தர்களான நூறுப்பத்து இலட்சம் சிங்களவர்கள். இம்மனித இனங்களுக்கு இடையிலான உறவுகள் தொன்று தொட்டே சோதனைக்கு உள்ளாகிவருகின்றன. ஆயினும், நிஜமாக இரத்த ஆறு பெருகத் தொடங்கியது, 1983 ஜூலை மாதத்தில் தான் தமிழருக்கு எதிராக அப்பொழுது நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான கொலை, கொள்ளை, தீவைப்பு நிறைந்த கலவரங்களில் நூற்றுக்கணக்கில் தமிழ் மக்கள் மாண்டனர். அதுமுதற்கொண்டு உள்ளூர்ப் போர் படிப்படியாக வலுவூட்டி வளர்த்துவரப்பட்டுள்ளது.

வட இலங்கையில் "ஈழம்" என்ற பெயர்கொண்ட ஒரு தனி அரசை நிறுவுவதற்குத் தீவிரமாக முயன்று வரும் தமிழ் கெரில்லாபடைகளுக்கும், அரசாங்கத் துருப்புக்களுக்குமிடையில் நிகழ்ந்த மோதல்களால் அல்லது ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்களால் டிசம்பர் மாதத்தின் போது அனேக நிரபராதிகளான குடியக்கள் உட்பட ஐநூறுக்கும் மேற்பட்டோர் மரணமாயினர். சென்ற வாரம் 'டைம்'' சஞ்சிகையின் புதுடில்லிப் பணியகத் தலைவர் டீன் பிறெலிஸ், இத்தீவுக்கு விஜயம் செய்தமையின் விளைவான அறிக்கை இங்கு தரப்படுகிறது.

இலங்கைத்தீவின் தொல்பெரும் வட மத்திய நகரமாகிய அனுராதபுரத்தில்

> 85' பெப்ரவரி 11-ல் டைம் சஞ்சிகையில் வெளியான கட்டுரையின் முழுமையான தமிழாக்கம்.

தமிழ் கெரில்லாக்களுக்கு எதிரான பிரதான பாதுகாப்பு அரண் இலங்கை இராணுவ துருப்பினரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. பகற்பொழுதில் நிலைமை அமைதியாக இருப்பது போல் தோன்றும் உல்லாசப் பயணிகள் மிகச்சிலரே பகற்போசனம் அருந்தவும் பௌத்த வழிபாட்டிடங்களைப் பார்வையிட்டுச் செல்லவும் அங்கு வருவதுண்டு ஆனால் அவர்களிற் பெரும்பாலானோர் அங்கு இரவைக் கழிப்பதில்லை. காரணம் கடும் அச்சம் ஹோட்டல் சொந்தக்காரர் ஒருவரது சொற்களில் "சூரிய ஒளிக்கும் சந்தோஷத்திற்கும் பெயர்பெற்றிருந்த நம் அதைவிடுத்து ஒரு பயங்கர நாடகப் பெயர் வாங்கத் தலைப்பட்டுவிட்டோம்' பட்டினத்திற்குப் புறத்தேயுள்ள காட்சி. நாடக பாணியில் மாறுதல் அடைய ஆரம்பிக்கிறது வீதிக்குக் குறுக்கே தடையிடப்பட்ட நிலையங்களில் எல்லாம் காவல் புரிந்து நிற்கும் அரச போர்ப்படையினர், சதா பதறும் கைகளில், சோவியத் நாட்டில் உற்பத்தியாகிய ஏ.கே 47 தாக்குதல்-முறையின் ஏந்தியவண்ணம் காணப்படுகின்றனர். மேற்கு கடலோரமாக, மன்னார்ப்பட்டினம் கடந்து மேலும் வடக்குநோக்காகச் சென்றால், நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத் தென்னந் தோப்புகளும் பிற பாரிய மரங்களும குறுகத் தறித்து வீழ்த்தி அடிக்கட்டைகள எரிந்து கருகிப் போயுள்ளமை கண்ணில்படும். கெரிலாக்கள் அங்குவந்தால் அவர்கள் ஒழிந்து மறைந்து கொள்ள டியாதிருக்கவே அரசாங்க இராணுவத்தினர் இவவாறு பற்றைகள், தழை-

## வெஞ்சினப் போரும் பயங்கர ராணுவ தர்பாரும்

குழைகளை நீக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது

### இடைநடுவில் முறிந்துவிட்டன

1984, டிசெம்பர் வரைக்கும் சர்வ கட்சி மகாநாடு எனும் பெயரிடப்பட்டு, பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இலங்கையில் அங்கீகரிக்கப்பெற்ற அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் இதனை நடத்திற்று இதன் நோக்கம், தமிழ்மக்களுடனான இவ்வுள்நாட்டுப்பிணக்கிற்கு ஒரு சமாதானமான தீர்வுகாண்பது என இருந்தது. இக்குறிக்கோளை அடைய முன்பே இணக்க உரையாடல்கள் இடை நடுவில் முடிந்து விட்டன

வாஷிங்டனில் நிலைபெற்றுள்ள அமெரிக்க மத்திய அரசு இந்நெருக்கடியையிட்டுக் கலந்துரையாட வருமாறு ஜனாதிபதி ஜூனியஸ் ஜெயவர்த்தனவுக்கு ஓர் அழைப்பு விடுத்தது. அவர் தேசிய பந்தோபஸ்து அமைச்சர், லலித் அத்துலத்முதலியை அங்கு அனுப்பி வைத்தார். அங்கே நடந்தது என்ன; இலங்கைத் தீவு அரசாங்கத்திற்குப் பாரிய இராணுவத்துணையோ உதவியோ வழங்க வாஷிங்டன் உறுதியாக மறுத்துவிட்டது. அதற்குக் காரணமாக அது முன்வைத்தது. அனேகமாக எல்லோராலும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ள ஓர் உண்மையையே ஆகும். இலங்கையின் வடக்கு. கிழக்குப்பாகங்களில் ஒழுக்கக் கட்டுப்பாடு சிறிதும இல்லாத இலங்கைப் பாதுகாப்பு படையினர் பரவலாக பயங்கர தர்பார் நடத்தியபடி இருக்கின்றனர். என்பதே அமெரிக்காவினால் எடுத்தாளப்பட்ட அந்த உண்மை.

### கண்டதும் சுட்டுக் கொல்

வெகுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்வோர் தமிழ் மக்கள்தாம். வெகுவாக என்பதைவிட முழுமையாக என்பது சாலப் பொருந்தும். இந்த இலங்கைத் தீவின் வடக்கு மூலையிலுள்ள இக்குடாநாடு அடங்கலும இராணுவம் நாள்தோறும் வலுவுள்ள ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ளது. அந்தி முதல் விடியும்வரையான இவ்வூரடங்குதலின்போது, இராணுவமும் ஏனைய அரச படையினரும் சர்வசாதாரணமாக, "கண்டதும் சுட்டுக்கொல்'' லும விதியைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்திய உபகண்டத்தின்தென் மாநில அரசாகிய தமிழ் நாட்டிற்கு. இலங்கையிலிருந்து இராணுவ அட்டூழியங்களுக்கு அஞ்சியோடிப் புகலிடம் அடைந்துள்ள தமிழ் அகதிகளின் தொகை நாற்பதினாயிரம் அளவில் இருக்கும் என மதிப்பிடப் படுகிறது. தமிழ் ஆயுதப் போராட்டவாதிகள், இதனுடன் குறைந்தபட்சம் இன்னுமொரு இருபதினாயிரம் தமிழ் அகதிகள் சட்டவிரோதமாக இந்தியா சென்றுள்ளனர் எனக் கூறுகின்றனர். இப்படிவரும் அகதிகளில் இளைஞர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, போர் உபாயங்களில் பயிற்றப்பட்டு' தமிழ் கெரிலாக்களுடன் சேர்ந்து தோளோடு தோள் நின்று போராட மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படுவதும் உண்டு. வட இலங்கை எங்கணும் இராணுவ நாசவேலைகளின்பின் எஞ்சிய இடிபாடுகளையும், அழிவு அனர்த்தங்களையும் காணலாம்.

இந்துக் கோவில்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் மத வழிபாட்டுக்கு உரியன, புனிதம் வாய்ந்தன. இராணுவத்தினரால் இப்புனிதம்கூட துச்சமாக மதிக்கப்பட்டுள்ளமை கண்கூடு சென்ற மரதம் தேவாலயத்தினுள்ளே றோமன் கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் இராணுவத்தினரால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### ஈ, இலையான் போல பொது மக்கள் கொலை

இப்படியாக அவர்கள் மெதடிஸ்த மதகுரு ஒருவரையும் சுட்டுக்கொன்றனர். இத்தகைய காட்டுமிராண்டித்தனங்களில் மிக மோசமான ஒரு சம்பவம் மன்னார் என்ற வடமேற்குப் பட்டினமொன்றில் நடந்தமையை அவ்விட வாசிகள் விவரித்தனர். தமிழ் கெரில்லாக்கள் ஒழிந்து காத்திருந்து இராணுவத்தினர் மீது ஒரு தாக்குதல் நடத்தியதை அடுத்தே இச்சம்பவம் நடைபெற்றது இப்படுகொலையைக் கண்ணுற்ற கண்ட ஒருவர் கூறுவதைக் கேட்போம்: "அரச போர்ப்படையினர் தங்கள் பார்வையிற்பட்ட எல்லோரையும் சுடலாயினர். ஈக்கள், இலையான்கள், இறப்பதுபோல பொது மக்கள் இறந்தனர். தெருவீதிகளில் இறங்கிய இராணுவத்தினர் அந்தந்த இடங்களிற் ஆட்களைக் கொன்றனர் வேறு சிலரைக் கைதாக்கிக் கொண்டு சென்றனர்

அரசாங்க தபாற் கந்தோருக்கும் உள்ளே சென்று அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளை அவர்கள் வரிசையாக நிறுத்திச் சுட்டு வீழ்த்தினர். பின்னர் வயல்களில் கமஞ்செய்து கொண்டிருந்தவர்களைத் தேடிப்போயினர் அவர்கள். எவரையும் இராணுவத்தினர் விட்டுவைக்கவில்லை. நரகத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு காட்சி அது.'' காலை பதினொரு மணிகுத் தொடங்கிய படுகொலைகள் மாலை நாலரை மணிக்கு முடிந்ததும் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இப்படுகொலையின் விபரங்களை உறுதிப்படுத்திய மன்னார் பிரஜைகள் குழுவின் உப- தலைவர். வண. ஹிலறி ஜேசெப் பிதாவானவர், "நாம் அனைவரும் கோர பயத்தில் உயிர் வாழ்கிறோம் நாங்கள் பலியாவதற்கு அடையாளமிடப்பட்டவர்கள்'' என துயர் தழும்ப கண்டனக் குரல் கொடுத்தார். இலங்கை இராணுவ கமாண்டர்கள் சிலர் கூட இந்த இராணுவத்தினர் நடந்து கொண்டவிதம் வெட்கக்கேடானது என ஒத்துக் கொள்கின்றனர். இராணுவ அதிகாரி ஒருவரின் சொற்களிலேயே, "இராணுவத்தினர்க்கு இருக்கவேண்டிய ஒழுக்கக் கட்டுப்பாடு இல்லமையால், பொதுமக்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் நாம் இழந்து விட்டோம். அவர்கள் எம்மை வெறுத்து ஏழனமாக கணிக்கின்றனர். இராணுவ வெற்றி ஈட்டலாம் என இலங்கை அரசாங்கம் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறது என அத்தகைய அரசின் எதிர்கால நம்பிக்கைகளை ஒருபுறம் ஒதுக்கி விடுகிறார் தலைநகராகிய கொழும்பில் உள்ள மேற்கத்திய சிரேட்ட இராஜதந்திரி ஒருவர்.

"வடக்கில் இராணுவம் தோல்வியடைந்து வருகிறது. பிரிவினைவாதிகளுக்கு எதிர் நின்று ஜெயிக்கும் ஆற்றல் அவர்களிடம் இல்லை. பிரிவினை கோரும் கெரில்லாக்கள் தமது பக்கம் வெற்றி வாடை வீசுவதை உணர்கின்றனர் அதற்கும் மேலாக, தமிழ்ப் பொது மக்களின் முழுமையான ஆதரவு அவர்களுக்கு உண்டு. இளம் இராணுவ அதிகாரிகள் ஒரு புரட்சி நடத்தி, தற்போதுள்ளதிலும் பார்க்க, தமிழருக்கு எதிராகக் கடும்பிடியான ஓர் அரசை நிறுவ முயலலாம் எனவும் கொழும்பில் பேச்சொன்று அடிபடுகிறது.

### ஏழை மீனவர் தினமும் அவதி

அண்மையில் ஜெவர்த்தன அரசாங்கம் விதித்துள்ள ஒரு தடையுத்தரவின் விளைவாக, யாழ்ப்பாண வட குடாநாட்டைச் சூழவுள்ள கடல்நீர்ப் பரப்பின்மீது சென்று மீன் பிடிக்க வகையறியாது ஏறத்தாழ இருபத்தையாயிரம் இலங்கை மீனவர்கள் தமது சீவனோபாயத்தை இழந்து அவதியுறுகின்றனர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள இருபத்திரண்டு மைல் அகல பாக்கு நீரிணையில் இவ்வரசாங்கம் கடறபடைக் கண்காணிப்பு வலயம் ஒன்றையும் விதித்து, அங்கு தென்படும படகுகள், கப்பல்கள் முதலாயினவற்றை இனம் கண்டு கொள்ள முடியாதுபோகும் பட்சத்தில் அவற்றின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமபடி இலங்கைக் கடற்படைக்கு ஆணையும இட்டுள்ளார், ஜனாதிபதி. இதன் நோக்கம் எதுவாக இருக்கலாம்?'' ஒன்று, தமிழ் அகதிகள் நீரிணையைக் கடந்து இந்தியா செல்வதைத் தடுத்தல், இரண்டாவதாக தமிழ் கெரில்லாக்கள் அங்கிருந்து இலங்கைக்கு மீள்வதையும் பொருள் பண்டங்கள் அங்கிருந்து வந்திறங்குவதையும் தடுத்தல.

ஒன்றிணைய முயலும் தமிழ் கெரிலாக்களின உத்தேசம், இராணுவத்தின் மீதான தமது தற்போதைய தாக்குதல் முறையை மாற்றியமைத்தலாகும். இதுகாறும நிலவிய "நொடடிவிட்டு ஓடிவிடும்'' போராட்டப் பாணி, இனி மேல் இராணுவத்துடன் "நேருக்கு நேர் போரா'' யுத்த உத்தியாக மாறும் என தமிழ் கெரில்லாக்கள் பிரகடனப் படுத்தியுள்ளார்கள்.

இந்திய மாநகராம் சென்னையிலுள்ள தமது புகலிடத்தினின்றும், ஒரு தமிழ்த் தலைவர் மனோதிடம் தொனிக்கக் கூறுவதாவது:"அடுத்தமூன்று, நான்கு மாதங்களில் நாம் யுத்தம் தொடுப்போம். அதற்கான காலமும் இடமும் நாமே நிருணயிப்போம். வெற்றி நமதே. இது திண்ணம்.'' நீணைகு இப்பால், இலங்கையில் இருந்த வண்ணம் தீட்ட நம்பிக்கையை எதிரொலிக்கும் வகையில், "நெருங்கி வருகிறது நாம் பார்த்திருந்த நன்னாள்.'' என்கிறார் இன்னுமொரு தமிழ்த் தலைவர்.

## வரி விளம்பரம்

### வாங்கவும் விற்கவும்

பூச்சாடிகள்- முடைகள்- கோழிகள்- குஞ்சுகள்- கூடுகள்- ஆடுகள்- மாடுகள் - வாங்கவும் விற்கவும் ஏல விற்பனை நிலையம் கோப்பாய்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு

வெளிநாடு செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம்

1. Berlin (பேர்லின்), பரீஸ், ஹொலண்ட், கனடா, சுவீஸ், லண்டன் மற்றும் எல்லா நாடுகளுக்கும் யாழ்நகரிலே மற்றெல்லா ஸ்தாபனங்களையும் விட மிகக் குறைந்த கட்டணத்தில் விமான டிக்கட்டுக்களை உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

2. யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கா செல்லும் வரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து சகல ஒழுங்குகளையும் செய்து கொடுப்பார்

3. கொழும்பில் தங்குமிடவசதி, உணவு கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா செல்லும் ஒழுங்குகள் காசோலைகள் (Travellers Cheque) இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

4. மற்றும் Indian visa, Passport, Bonding, Renewal Alteration ஆகியன செய்து கொடுக்கப்படும்.

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்

Mrs. Balasingam Savithiridevi


QUICKS ENTERPRISES.

Travels And Tours,
533, Stanley Road,
Jaffna.

Branch:-

Saraswathy Gardens,
Church Road,
Chavakachcheri;
T' Phone: 273.

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ரூடியோ




# ஈழத்தில் தமிழ் மக்கள் சிறுபான்மையினரா?

பல இனத்தாரும் பல மொழிகளும் உள்ள நாட்டில் ஒரு மொழி பேசும் ஒரு சாதி அரசாங்கத்தை அமைப்பது கொடுமையான தீமைகளை விளைவித்தே தீரும். அந்நாடுகளில் ஒற்றுமையும் அமைதியும் எங்ஙனம நிலைபெறும்? நடந்தேறிய இரு பெரும் போர்களின் பயனாகவும் அவற்றின் பின் ஏற்பட்ட உடன்படிக்கைகளின் பயனாகவும இன்று பல இனத்தாரும் பல மொழி பேசுபவரும அமைதியுடனும ஒற்றுமையுடனும் வாழ்வண்டுமாயின் பன்மொழி பலவின (Mul ilingual Multinati nal) அரசை நிறுவுவதே முறையாகு மென்பது அரசியற்றுறை அறிஞரின் துணிவாகும்.

எனவே இறு அக்கரன் பிரபு அரசியல் அமைப்புப் பற்றிக் கூறிய மொழிகள் சிந்திக்கத்தகன: ''பலவேறு இனததார் எவ்விதமாக வேனும் நசுக்கப்படாமல எல்லாவுரிமைகளையும பெறறு வாழககூடிய நாடே முனனேற்றமுளள நாடாகும். எல்லா இனத்தாரும் சமநிலையுடன் பங்குபற்றாத அரசு பூரண அரசன்று. எல்லா வகுபபினரும் தத்தம் பண்பாட்டினை வளர்ப்பதற்கு வாய்ப்புக்கள் அளியாத அரசாங்கம் சீர்குலைந்த அரசாங்கமாகும். ஏனைய இனத்தாரை முற்றாக

## வண. தனிநாயகம் அடிகள்

நீர்மூலமாக்கியழிக்க, அல்லது அவரைத் த முட் பலவந்தமாகச் சேர்த்து விட, அல்லது அவரை நாட்டினை விட்டு ஓட்டிவிட எத்தனிக்கும் அரசாங்கம் சக்தி குன்றி மடிந்து விடும். மேலும் இத்தகைய அரசாங்கம் ஏனைய வகுப்பினரைத் தம்முடன் சேர்த்துச் சமனாக நடத்த வல்லமையற்றதாயிருப்பதாற் குடியாட்சியின் அடிப்படைக்கல்லே அற்ற அரசாங்கமாகச் சீரழியும்.''

வளம் பொருந்திய பண்பாட்டையும், பண்டுதொட்டு இலங்கையின் வரலாற்றுச் சிறப்பையும் கொண்ட தமிழ் பேசும் இனத்தாரைச் சட்டத்தால் அழிக்கவோ சிங்கள மக்களாக மாற்றவோ அரசாங்கத்திற்கு வலிமையில்லை. எங்கே மொழியுரிமை கொடுங்கோன்மையால் அடக்கி ஒடுக்கப்பட்டதோ அங்கே அடக்கப்பட்ட மக்கள் புத்துணர்ச்சியுடனும் புத்தாற்றலுடனும் தம்முரிமைக்காகப் போராட எழுந்தனர். 'ஒக்ஸ்போட்' பல்கலைக் கழகத்திற் சரித்திரப் போதகாசிரியரான வின்செற் ஹார்லோ என்பவர் இலங்கை வந்து திரும்பியபோது எழுதியதாவது;

''நானும் எனது மனைவியாரும் யாழ்ப்பாணம் சென்று பூர்வீக இலங்கைத் தமிழர் வசிக்கும் இவ் வரண்ட பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்தோம். இங்கு வசிக்கும் திடகாத்திரமும் விவேகமுமுள்ள மக்களுடைய மொழியை நசித்துச் சிங்களத்தை அரசகரும மொழியாக்க முயற்சி செய்யும் அரசினர் மீது எவ்வளவு ஆத்திரமும் வெறுப்புமுடையவராய் இருந்தார்களென்பதைக் கண்டோம். சிங்களவர் காலகதியில் தமது மொழியை மாத்திரமல்ல; புத்த சமயத்தை அரசாங்க மதமாகக் கொள்ளவும் கூடும். இதுவும் மிகத் துவேஷத்தை உண்டு பண்ணியுள்ளது.

''சிங்களவர் தமது புராதன பெருமைகளைப் பழையபடி நிலைநாட்ட எத்தனிப்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார். எவருக்கும் தமது சாதியினரின் அம்சங்கள் அருஞ்செல்வங்களே. ஆனால், சிங்களவரும் தமிழரும் சமநிலையைப்பெற்று அரசியலை நடத்தினாற்றான் இலங்கை உண்மையில் நல் விருத்தியடையும், இல்லையாயின் வேற்றுமையும் அழுக்காறும் ஏற்பட்டுச் சுதந்திர அரசாங்கம் பெலங்குன்றி எதிர் காலத்திற் கீழ்நிலையடைய வேண்டியதாகும்.

''சமீபத்தில் ஒரு சிங்கள மாணவருடன் நான் பேச நேர்ந்தது. இலங்கையின் அரசகரும மொழி ஒன்றாக மாத்திரம் இருந்தாற்றான் இலங்கை மக்களிடையில் ஒற்றுமை ஏற்படுமென்று அவர் வாதித்தார் பிரிட்டிஷ் அரசினரே இவ் விஷயத்திற் பலமுறை இப் பெரிய பிழையைச் செய்ததை வரலாற்றிற் காணலாம். என்று நான் அவருக்கு நினைவூட்டினேன்.''

### 1958-ல் கூறியது 1985-ம் ஆண்டிலும் பொருத்தமானது

இலங்கையில் வாழும் தமிழர் சிறுபான்மையரென்று கூறிவிடவியலாது. இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தொகை, அவர்கள் இலங்கையின் பல்வேறு முன்னேற்றங்களுக்கு நிகழ்த்திய தொண்டு, இலங்கையின் பண்பாட்டிற்கும் செல்வாக்கிற்கும் தமிழ் மொழி அளித்த சேவை, தமிழ் பேசும் மக்கள் சிங்களம் பேசும் மக்களுக்கு ஆற்றிய நன்மைகள், இலங்கை சுதந்திரம் அடைவதற்கு உழைத்த தமிழ்த் தலைவர்களின் தொண்டு இன்னோரன்ன பல காரணங்களை முன்னிட்டே தமிழ் மொழிக்குச் சமநிலை அளித்தல் வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர் சிங்களத் தலைவர் சிலர். நாட்டின் ஒற்றுமை மொழியால் வருவதன்று, சமயத்தால் வருவதுமன்று. ஒரு மொழி பேசும் ஒரு நாட்டை அமைத்தல் வேண்டுமெனின் ஆங்கிலத்தைப் பேசும் மக்கள் அனைவரும் ஆங்கிலேயர், அமெரிக்கர், தென்னாபிரிக்கர், அவுஸ்திரேலியர் என்று பிரிந்திராது, ஒரே ஒரு அரசினை நிறுவுதல் வேண்டும்.

இந்திய மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர்; பல மாகாணங்களைச்சேர்ந்தவர்கள் ஆயினும் இமயமலையைச் சேர்ந்தவர்களும் தாம் அனைவரும் இந்தியரென்ற ஒற்றுமை உணர்ச்சியைப் பாராட்டி வருகின்றனர். எனவே மொழியால் வருவதன்று ஒற்றுமை மக்களின் ஒற்றுமை அவர்களின் மனப்பான்மையிலும் சிந்தையிலும் குடிகொண்டிருக்கின்றது. இலங்கை நாட்டிற்கு ஒற்றுமை வேண்டுமெனின் பல சமயங்களையும், பல வகுப்புக்களையும் சமமாகக் கொண்டு இத்தீவின் நிலப்பரப்பில் ஒரே குடையின் கீழ் வாழ உரிமைகள் கொடுப்பதாற்றான் வரும்.

(நன்றி: ஈழகேசரி வெள்ளி விழா, மலர்.)

# இராமநாதபுரம் இலங்கையிலிருந்து பிரிந்த ஒரு பகுதி

இராமேஸ்வரம் கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுதல் அல்லது தாக்குதலுக் குள்ளாதலும் இப்போது அடிக்கடி நடைபெறும் விடயங்கள். இவைகளைத் தடுப்பதற்கென அண்மையில் இந்திய அரசாங்கம் கரையோரக் காவற்படைக் கப்பல்களை தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பாக கடலில் உலாவர விட்டுள்ளமை அமைந்துள்ளது.

இலங்கை அரசையும். இந்திய அரசையும் அடிக்கடி பேசவைக்கும் இந்த இராமேஸ்வரம் பண்டுதொட்டே இரு நாடுகளுக்குமிடையில் பலவித தொடர்புகளை ஏற்படுத்தி வந்திருக்கிறது. அனுமாரினால் இலங்கை தீயிடப்பட்டபோதே இராமேஸ்வரம் முக்கிய பங்கேற்றிருக்கிறது. இலங்கைக்குச் சீதையைத் தேடிவந்த அனுமார் இராமநாதபுரத்திலுள்ள மலையில் இருந்துதான் இலங்கைக்குத் தாவினாராம்.

தென்தமிழ் நாட்டின் மிகப் பழைய பகுதிகளில் ஒன்றான இராமநாதபுரத்தின் தொடர்ச்சிதான் இலங்கை எனக் கூறப்படுகிறது. இடையில் புகுந்த கடலால்தான் இலங்கையும் இராமநாதபுரமும் பிரிந்தன எனவும் வரலாறுகள் தெரிவிக்கின்றன; (இந்தக் கடலால் தானே இன்று இத்தனை பிரச்சினை ?)

''முகவை நகர்'' என்று முற்காலத்தில் அழைக்கப்பட்ட இராமநாதபுரம் இராமபக்தனான குகன் கட்டிய நகரம் ஆகும். 'முகவை' எனக் குகனே பெயரிட்டான் எனவும் கூறப்படுகிறது.

**ம. வரதராஜன்**

இராமநாதபுரத்திலிருந்தே இலங்கைக்கு இராமர் பாலம் அமைத்து வந்தாராம் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடைப்பட்ட பகுதி 'இராமரணை' எனக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

வெற்றிபெற்றுச் சீதையை மீட்டு தாயகம் திரும்பிய இராமர் இராவணனைக் கொன்ற குற்றத்திற்குப் பிராயச்சித்தமாக அப்பகுதிக் கடற்கரை மண்ணில் லிங்கம் அமைத்து வணங்கினாராம்; அவ்விடத்திலேயே இன்று இராமநாதசுவாமி கோவில் அமைந்துள்ளதாம்.

இராமேஸ்வரத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் கட்டிட சிற்பவேலைப்பாடுகள் உலகப் பிரசித்திமிக்கவை.

சேதுக்கடலுக்கு அதிபதியாக விளங்கிய சேதுபதி மன்னர்கள் இராமநாதபுரத்தை ஆண்டார்கள், இச் சேதுபதி மன்னர்களே மதுரையில் நான்காவது தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தித் தமிழ்ப் பணி புரிந்தவர்களாவர்' விண்ணரசு கொண்ட தேவர் எனப்பட்ட சேதுபதி மன்னர் இலங்கையின் சிலபகுதிகளையும் ஆண்டதாக வரலாறு கூறுகிறது.

1600ம் ஆண்டுகளின் தொடக்க காலப்பகுதிகளில் ஆட்சி நடத்திய இச் சேதுபதி மன்னர்களின் அரண்மனை இன்றும் இருக்கிறது.

தமிழகத்தில் இராமநாதபுர மாவட்டத்திற்கே நிறையத் தீவுகள் சொந்தமாக உள்ளன. இங்குள்ள சுமார் பதினைந்து தீவுகளிலும் இராமேஸ்வரமே பெரிய தீவாகும். கச்சதீவும் இவற்றில் ஒன்றாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இராமர் காதையிலும் பின்னர் சேதுபதி மன்னர் காலங்களிலும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பாலம் நிலைகொண்ட இராமேஸ்வரம் தான் கவிபாரதி பாடிய நிறைவேறாக் கனவு வரிகளிலொன்றான 'பாலம்' அமையக் காரணமாகுமா? என்பது இனிவரும் வரலாறு தரும் ஒரு பதிலாகும்!

## விசா வேண்டும்

கஷ்டப்பட்டு
காசு கட்டி
கனடா போக
விசா அடித்து
வெளிக்கிடும் வேளை
வேணுமாம்
வவுனியா கடக்க
இன்னொரு
விசா!

அல்லையூர்
அன்ரனிதாஸ்

ஈழமுரசு

# பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்

செம்பியன் செல்வன்

'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' என்றொரு கவிதைத் தொகுப்பு இந்தியாவில் 'க்ரியா' வெளியீடாக பிறந்துள்ளது. பொறாமைப்படும் அளவிற்கு ஆங்கில நூல் பதிப்புகளுக்கு ஈடாக அச்சமைப்பும், புத்தக நேர்த்தியும் முழுமை கொண்டுள்ளன. விலை இந்திய நாணயத்தில் ரூபா இருபது.

உள் பக்கங்ளிகல் நூலின் தலைப்பு ஆங்கில எழுத்தில் அச்சிடப்பட்டிருப்பதுடன், A Collection of Modern Poems எனவும் மேலதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நூலின் பெயரை 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள் — ஒரு நவீன கவிதைத் தொகுதி' என்றாக்கிக் கொள்ளலாம்.

ஆகவே, ஈழத்து கவிஞர்கள் பதினொருவரின் நவீன கவிதைகளை மட்டுமே நூலில் எதிர் பார்க்க வேண்டும் என நூலின் 'ஓர் அறிமுகம்' (வெளியீட்டாளரால் எழுதப் பட்டதா? தொகுப்பாசிரியர்களால் எழுதப்பட்டதா என்ற தெளிவு அற்றுக் காணப்படுகிறது) கூறுகிறது.

மரபுக் கவிதை, நவீனக் கவிதை பற்றிய வரைவிலக்கணங்கள் காணப்படலாம் என்று நூலைப் புரட்டினால் மீண்டும் ஏமாற்றம்... 'ஈழத்திலே நவீன தமிழ்க் கவிதைக்குச் சுமார் நாற்பது ஆண்டு கால வரலாறு உண்டு. 1940-களிலிருந்துதான் இங்கு நவீன தமிழ்க் கவிதை – அதன் முழு அர்த்தத்தில் – தோன்றி வளரத் தொடங்கியது......'– காலவரையறைக்கான காரணங்களும், நவீன தமிழ்க் கவிதை வரைவிலக்கணங்களும் காணப்படவில்லை. ஆனால், 'இது' பற்றி அறிய விரும்புவோர் பார்க்கவும்: இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம். வாசகர் சங்க வெளியீடு, இலங்கை 1979 என அடிக்குறிப்புக் கூற, அவசரம் அவசரமாக அதை எடுத்துப் புரட்டினால்... 'பழைய, பண்டித மரபு வழிப்பட்ட நிலப்பிரபுத்துவ வாழ்க்கை அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்ட பிரபந்த இலக்கிய வகைகளிலிருந்து மாறுபட்டு, நிகழ்கால வாழ்க்கை நிலைகளையும் அதன் அடிப் பிறந்த வாழ்க்கை நோக்குகளையும் கருத்தோட்டங்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளையே நவீன கவிதை என்ற தொடர் குறிக்கின்றது. நவீன உள்ளடக்கத்திற்கு ஏற்ப அதன் உருவடிவ அமைப்பிலும், – சொற்கள், சொற் சேர்க்கைகள், ஓசை ஒழுங்கு' வெளிப்பாட்டு முறை போன்றவற்றிலும் – இக்கவிதை முறை பழைய செய்யுள் இலக்கியங்களிருந்து எவ்வளவோ மாறியுள்ளது என்பதையும் நாம் காணலாம்...' (கூ நூல்பக்கம் 18)

இந்த விளக்கம்பற்றிய உரத்த சிந்தனையில் இலக்கிய நண்பர் ஒருவர், இந்தவரைவிலக்கணப்படி சிலப்பதிகாரம்மிகச்சிறந்த 'நவீன கவிதைக் காவியம்' என நான் சொல்கிறேன். நீர் மறுக்கிறீரா? — என்று தர்க்க ஆவேசத்துடன் கேட்கிறார்.

மரபு என்பது செய்யுள், இலக்கண வழக்கா? சடங்கு, சம்பிரதாய, சான்றோரின் விழுமிய நடப்புக்களா?... அவ்வக் கால உலகியல் நடப்புகளின் மாறிவரும் இயல்புகளை மாறலியான தொல்கால இலக்கண இலக்கியல் விதிகளுக்கிடையே சிறை செய்வதா? என்பது பற்றி இது வரை தெளிவான வரைவிலக்கணங்கள் வெளிவராத நிலையில் இந்தத் தொகுப்பு வெளிவந்துள்ளது.

இதிலிடம் பெற்றுள்ள பதினொரு கவிஞர்களும் ஐந்து தலைமுறைகளைப் பிரதிநிதித்துப் படுத்துகிறார்களாம். ஒரு தலைமுறை எத்தனை ஆண்டுகளைக் கொண்டது? அப்படியல்ல... கவிஞர்களின் முதிர்ச்சியைக் கொண்டு தலைமுறை கணிக்கப் படுகிறதாம். முதிர்ச்சியின் அளவுகோலென்ன: 1940ல் கவிதைத் துறையில் புகுந்த மஹாகவி 1950ல் முதிர்ச்சியடைந்து 1960ல் தனது உச்சநிலையை அடைந்தார். முதிர்ச்சி, உச்சம் இரண்டும் தெளிவாக வரையறை செய்து விடவேண்டும். இதிலிடம் பெற்றுள்ள கவிதைகள் இவரணைடையும் புலப்படுத்த வேண்டும் (ஆய்வு ரீதியில்) இப்படியே இரண்டாம தலைமுறை முருகையன், நீலாவணன், மூன்றும தலைமுறை மு. பொன்னம்பலம், எம்.ஏ. நுஃமான சண்முகம சிவலிங்கம, தா. இராமலிங்கம் நான்காம் தலைமுறை சி. சிவசேகரம், சு. வில்வரத்தினம், வ.ஐ.ச. ஜெயபாலன், ஐந்தாம் தலைமுறையில் சேரன் முதலிடம் வகிக்கிறார்.

தலைமுறைப் பகுப்பு வெறும் காலரீதியானது மட்டுமல்ல இவர்கள் எழுதத் தொடங்கிய காலப்பகுதியில் நிலவிய கவிதை பற்றிய நோக்குகளும் சமூக அரசியல் சக்திகளும் இவர்களது கவிதைப் போக்குகளினால் கணிசமான பாதிப்பைச் செலுத்தி இருப்பதையும் நாம் அவதானிக்கலாம். முதலாம் தலைமுறைக்கும், ஐந்தாம் தலைமுறைக்குமிடையே இலக்கிய நெறியில் சமூகத்தாக்கம் பற்றியளவில் பலத்த வேறுபாடு நிலவுவதும் வரலாற்று நியதியே. முதலாம் தலைமுறையில் சமூகநெறிகள்– தத்துவ இயற்கோட்பாடுகளாக மட்டுமே பலம் கொண்டிருக்க ஐந்தாம் தலைமுறையில் மக்களின் வாழ்க்கையும் கவிஞனின் படைப்பும் ஒன்றுக்கொன்று முகம் கொடுக்கும் செயற்றிட்ட நெறியாக மாறியுள்ளன. எனவே முதிர்ச்சி, வளர்ச்சி, உச்சம் பற்றியகுறிப்புக்கள் கவிஞனுக்கு சரியான தீர்ப்புகளை வழங்கமாட்டா. அக்கால – இரண்டாம் தலைமுறை-முருகையன் கவிதைகளுக்கும் (கோபுரவாசல் • என்ன?) மல்லிகை இருபதாண்டுமலரில் எழுதிய முதலைகளும் மதலைகளும் என்ற கவிதைக்குமிடையேயுள்ள தலைமுறை வேறுபாடு என்ன?

கவிஞர்கள் பசுபதி, சுபத்திரன், சாருமதி, பா. சத்தியசீலன், கல்வயல் வே. குமாரசாமி போன்றவர்களிடமிருந்து கூட தலைமுறை மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தால் இந்நூலில் தென்படும் 'ஒருமைத்துவம்' குன்றி பல்முகத்தன்மை பரவலாக ஈழக் கவிதையுலகை வெளியுலகிற்குக் காட்டியிருக்கும் என்று எண்ணாமலிருக்க முடியவில்லை.

# காகமே காதலர் வரக் கரைவாய்

காகம் கரைவதைப் பார்த்து பல்வேறு அர்த்தங்கள் கற்பிக்கும் வழக்கம் தமிழரிடையே உண்டு.

காலையில் காகம் கரைந்தால் நல்ல செய்தி வரும். அல்லது சுற்றத்தவர் வருவர். அண்டங்காகம் அழுதால் கவலைக்குரிய செய்தி வரும். இப்படிப் பல நம்பிக்கைகள். இவை தமிழரிடையே தொன்று தொட்டு இருந்து வரும் பண்பாட்டுக் கொள்கைகள் என்பதற்கு பண்

## பண்டைய இலக்கியக் காட்சி

டைய இலக்கியங்கள் சான்றாக உள்ளன.

காகம் கரையவில்லை.

கரையும்படி கெஞ்சுகிறாள் ஒரு செவிலித்தாய். தான் வளர்த்த பெண் ஒரு ஆடவனுடன் சென்றுவிட்டாள். அவள் திரும்பிவரவேண்டும் அதுவே அவள் ஆசை.

எஸ். பி. கிருஷ்ணன்

அதற்காக, அத்தாய், காகத்தை விழித்து—

ஏ காகமே! உனக்கு நல்ல சுவையான உணவு சமைத்துத் தருகிறேன். உனக்கு மட்டுமா! உன் சுற்றமும் சேர்ந்து உண்ணத்தக்களவு தருகிறேன். உன் வாய் திறந்து நல்ல சொல் சொல்வாயா? என் மகள் தன் காதலனுடன் வருவாள் என்பதற்கு அறிகுறியாக நீ கரையமாட்டாயா?

இவ்வாறு அஃறிணை உயிர் ஒன்றுடன் ஒரு செவிலித்தாயைப் பேசவைத்தது என்ன? வளர்த்த பாசம். அவள் வளர்த்த செல்வி சொல்லாமல் கொள்ளாமல் தன் காதலனுடன் ' ஓடி விட்டாள்.

அவனும் கோழையல்ல. வீரனே. என் மகளுக்கு ஏற்றவனே. அவர்களை நான் கடிந்து கொள்ளமாட்டேன். திரும்பி வரட்டும். இரக்கமற்ற உலகமிது ஏ காகமே! நீயாவது என் மேல் இரங்கமாட்டாயா?

இவ்வாறு ஏங்கிய ஒரு பெண்ணின் உள்ளத்தைப் படம் பிடித்துப் பாடலாக்கி தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்தவர் ஓலாந்தையார் என்ற புலவர்.

சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் இப் பாடல் ஐங்குறுநூற்றுத் தொகுதியில்உள்ளது. பாடல் இதோ —

மறுவில் தூவிச் சிறு
கருங்காக்கை
அன்புடைய மரபின் நின்
கிளையொடு ஆரப்
பச்சூன் பெய்த
பைந்திண வல்சி
பொலம்புனை கலத்தின்
தருகுவன் மாதோ
வெஞ்சின விறல் வேல்
காளை யொடு
அஞ்சில் ஓதியை
வரக்கரைந்தீமே

# நண்பனே! சிந்திப்பாய்!

★ நிலாப்பிரியா ★

என தன்பு நண்பனே! ஏனின்று மாறிவிட்டாய்?
ஏன் [illegible]ஞே நீ இன்று வழிமாறிப் போகின்றாய்?
கன நாட்கள் ஆகிறது கலகலப்பாய்ப் பேசி நாம்
கண்களிலே அன்பை கடுகளவும் காணோம்
மனமில்லையா உனக்கு நாம் மகிழ்வாய் வாழ்ந்திடவே!
மனம் திறந்து சொல்லிடுவாய்! மதியுடனே செயற்படுவாய்

எல்லாளன் கெமுனு முதல் எத்தனையோ மன்னர்
எம் இனிய இந்நாட்டை இனிதாக ஆண்டார்
நல்லாத்தான் காத்திட்டார் நம்நாட்டை அன்று
நலமாக வாழ்ந்திட்டார் அமைதியுடன் மக்கள்
பொல்லாத இந்நிலைமை வந்ததேனின்று?
பொறுமையுடன் சிந்தித்தால் புரிந்திடுவாய் உண்மை

புத்தனவன் போதனைகள் புத்தகத்தில் இருந்தால்
போதுமென்று எண்ணாதே புரிந்திடுவாய் நண்பா!
சித்தார்த்தன் சிந்திவிட்ட சிந்தனைகளெதுவும்
சிறியவரை அடக்கிவிடு என்று சொன்னதில்லை
கத்தி கொண்டு சென்று கைகுலுக்க நினைத்தால்
கடுகளவும் அமைதி இந்நாட்டில் வாராது!

நமக்குள்ளே எதற்கு நாளும் சண்டை?
நாமின்று கேட்பதுவோ வேறேதும் அல்ல
எமக்குள்ள இறைமை, உரிமை இவற்றுடனே
எம்மினமும் சுதந்திரமாய் வாழ வேண்டும்
எமது நண்பர் உங்களுக்கு இவைகள் உண்டு
எமக்கு மட்டும் அவைகள் மறுப்பதேனோ?

பாரினிலே மக்களவர் எல்லோரும் சமமே
புத்தனவன் போதித்தான் என்னும் நண்பா!
ஊருக்கு உபதேசம் என்றில்லாமல்
உனக்குமது பொருந்துமென்று புரிந்து கொள்வாய்!
பாருக்குள் நமது நாடு பலரும் போற்ற
பாங்குடனே விளங்கிடவே பழுதில்லா முடிவெடுப்பாய்

# கவிஞன் பொறுமை

"நவாலியூர்க் கவிராயர்"

கவிதை படித்தி டுங்கா லுன்னி
கவிதை யைவேப் பெண்ணே யென்று
கவிலும் இலக்கி யச்சு வைஞு,
கவிதை படித்தி டுங்கா லுணர்க!

மெட்ட மைத்துப் பண்ணொடு பாடின்
மெல்லி சையிற் செவிப்புல னூடே
மட்டி லாப்புது இனிமை நல்கி
மனதை நிறைக்கும் கவிதை யாமே!

கவிதை பாடு என்கின் ஓடி
ககன தூரம் செல்லும் நண்ப
தவிர்க்க வுனது தப்பா மெண்ணம்
தமிழ்க் கவிதை ஒன்றைத் தேர்க!

தேர்ந்த தையோ சையோ டுநீ
தேறிய நெஞ்சொடு புலனும் கூட
சேர்ந்த தைப்படி யடா மீண்டும்
சேராக் கவிசேர்ந் தவிதம் காணடா!

மருந்தி துவும் சரிதான் வராயின்
மனத்தி னில்இன் னொன்றை ஏற்றடா
மருந்தெ னின்கசப் புணர்வு கூடும்
மருந்தென் குங்கவி நெஞ்சி லூறும்!

கவிதை படித்தி டுங்கா லுன்னி
ககன தூரம் ஓடும் சுவைஞு,
கவிதை படைத்தி டுங்கா லுற்ற
கவிஞன் பொறுமை உணர்ந் தாயா?

# இயமனின் பூவுலக பயணம்

★ இராஜராஜேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி

இயமதர்மராஜன் கொதித்துக் கொண்டிருந்தார். ஏற்கனவே பார்த்தவர்கள் உயிரை விட்டு விடும் அளவுக்கு இருந்த யமனின் தோற்றம் கோபத்தினால் மேலும் பயங்கரமாகியிருந்தது.

"இதென்ன அநியாயம் என்ரை அரசு சீர்கெட்டுப் போச்சுது! என்ரை சொல்லுக்கே மதிப்பில்லை! என்ரை சேவகர்கள் இப்ப அற்ப மானிடர்கள் பேச்சுக்குத் தாளம் போடத் தொடங்கி விட்டார்கள். இன்றே இதற்கொரு முடிவு கட்ட வேண்டும்" இயமதர்மராஜன் தன் தனி அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவியபடி சீறினார்.

வாசலில் நின்று இயமதர்மராஜனை நோட்டம் விட்ட சித்திரகுப்தருக்கு உச்சி மயிர் தொடக்கம் உள்ளங்கால் வரை உடம்பு குளிர் ஜுரம் கண்டது போல நடுங்கிக் கொண்டிருந்தது.


"என்ன திமிர் இந்தச் சித்திரகுப்தனுக்கு! இன்னுமா அவன் வரவில்லை." என்றபடி கால்களை நிலத்தில் உதைந்து பற்களை நறுமினார் இயமதர்மராஜன்.

"பிரபு அடியேன் இங்கே தங்கள் பாதாரத்தில்" என்று நடுங்கிய குரலில் குரல் கொடுத்தார் சித்திரகுப்தர். அவர் வாய் குளறியது. மெய் சோர்ந்தது. "உங்களை எல்லாம் உப்புத் தடவி வெய்யிலில் காயப் போட வேண்டும். சித்திரகுப்தனார் நடுங்கி ஒடுங்கி நின்றார். "இங்கே என் அரசாங்கமா அல்லது உங்களின் அரசாங்கமா நடக்குது?"

"பிரபு எதனைக் குறிப்பிடுகிறீர்கள் என்று புரியவில்லையே?" சித்திரகுப்தனின் குரல் பாதாளத்துக்குள்ளிருந்து வருவது போல கேட்டது. அடே குப்தா கணக்கா விடுகிறாய்! என்னடா விளக்கம் தேவை. நரமானிடர்கள் கணக்கு வழக்கில்லாமல் இயமலோகத்துக்கு வந்து குவியுதுகள். நீ கணக்குப் பார்க்காமலா எமது சேவகர்கள் பூவுலகு போய்க் கொண்டு வந்து குவிப்பான்கள்."

"ஐயா தர்ம பிரபுவே! பூவுலகில் நடக்கிற அநியாயங்களால் பூவுடல்கள் மண்ணில் உதிர்கின்றன. ஆவிகள் அந்தரத்தில் நிற்கின்றபோது கணக்குப் பார்க்க ஏது நேரம்? அப்படிக் கண்டவர்களைக் கொண்டுவர உத்தரவிட்டேன். அவ்வளவுதான் சுவாமி."

"நீ என்னடா சொல்கிறாய். பூவுலகில் அநியாயமா? பூவுடல் உதிருகிறதா? காத்தற் கடவுள் அங்கு என்ன தான் செய்கிறார்.? படைத்தற் கடவுள் விதி முடிவை எப்படி எழுதுகிறார்? அல்லது நீதான்



எப்படி கணக்குப் பார்க்கிறாய்?" கோபமாகச் சீறினார் இயமன்.

"பிரபு... பிரபு... என்னில் தப்புச் சொல்லாதேயுங்க. நான்... நான்...... அவரிட்டை நேராகவே கூடக் கேட்டனான். விதி முடிவு விளக்கமாக எழுதப்படவில்லை என்றும் அவனவன் எப்போ ஆத்மாவாக அந்தரத்தில் நிற்கிறானோ அதனையே அவன் முடிவாக எடுக்கச் சொல்லி சொன்னாருங்க." தட்டித் தடக்கி ஒரு மாதிரிச் சொல்லி முடித்தார் குப்தர்.

"இதை நீ முன்னரே எனக்கு ஏன் சொல்லவில்லை? பிரம்மாவின் ஊழல் வேலைக்கு நீ உடந்தையா?" உறுமினார் இயமனார். கைகால் வெடவெடக்க நின்றார் குப்தர்.

பூவுலகில் எந்தப் பக்கத்தில் பூதவுடல்கள் அதிகமாக உதிருது? என்ன காரணத்தினால் உதிருது என்றாவது தெரிந்து வைத்திருக்கிறீரா? அல்லது அதுக்கும் ஏதாவது காரணம் வைத்திருக்கிறீரா? "இல்லைப் பிரபு... எனக்கு முடிந்த வரையும் அறிந்து வைத்திருக்கின்றேன்"

"என்ன கொள்ளை நோய்களா? பஞ்சமா? அல்லது கொடிய மிருகங்களால் அழிவா? ஏன் இப்படி எமது கணக்கையும் மீறி மரணங்கள் அதிகரித்து விட்டன? நடுங்கிக் கொண்டிருந்த சித்திரகுப்தனுக்கு நடுக்கம் ஒருபுறம் பயத்தையும் மீறிச் சிரிப்பு வந்தது.

"பிரபு நீங்கள் சொன்ன காரணங்களாக இருந்தால் பிரமாவும், விஷ்ணுவும் கூட

## இவ்வாரக் கதையமுதம்

ஏன் இப்படித் தடுமாறுகிறார்கள்? அவர்கள் அவற்றைச் சமாளித்து விடுவார்கள்" என்றார் குப்தனார்.

"அப்படியானால்...! கோபத்தினூடே ஆச்சரியம் மிளிரப் புருவங்களை நெரித்த வண்ணம் வினவினார் இயமனார்.

'நவீன விஞ்ஞானயுக மானிடர்கள் விந்தை விந்தையான ஆயுதங்களைக் கண்டு பிடித்து விந்தையாக விளங்கமுடியாத பெயர்களையும் சூட்டி இருக்கிறார்கள். அவற்றில் ஒருவனின் உயிரைக் குடிக்கும் ஆயுதத்தில் இருந்து உலகின் ஒரு பகுதியை அழிக்கும் ஆயுதம் வரை பலரகப்பட்ட ஆயுதங்கள் இருக்கின்றன பிரபு. அவற்றினால் மனிதனை மனிதன் அடித்துக் கொண்டு சாகிறான் பிரபு"

"என்ன சித்திரகுப்தா! உனது கதை மிக சுவாரஸ்யமாக இருக்கிறது. இப்படியாக மானிடர் வளர்ச்சியடைந்துள்ள கதையை இதுவரை யாரிடமும் நான் கேட்டதில்லை. நீ சொல்லுவதைப் பார்த்தால் மானிடர் வைத்திருக்கும் ஆயுதங்களால் எங்களையும் வென்றுவிடுவார்கள் என்று சொல்வது போல இருக்கிறது. நான் இன்றே பூவுலகு போய் நிலைமையை நேரில் பார்த்து வரவேண்டும் நீரும் என்னுடன் வருகிறீர்; உத்தரவிட்டார் இயமன். இயமனின் மிடுக்கைக் கண்டு ஒருபுறம் பெருமிதமுற்ற குப்தனுக்கு பூவுலகில் அவர் கண்டவை ஞாபகம் வரவே முகம் தொங்கிப் போயிற்று.

"பிரபு பிரபு பூவுலகுக்கு இந்தச் சூழ்நிலையில் போவது சரி என்று படவில்லை" "நீர் இப்போ என்ன சொல்ல வருகிறீர் என்னுடன் வரப் பயப்படுகிறீரா?".

"சுவாமி.. சுவாமி அப்படியெல்லாம் ஒன்றுமில்லை".

"அப்போ ஏன் பயந்து சாகிறீர்?"

"பிரபு பூவுலகில் ஆகாய விமானம், அணுகுண்டு ரொக்கட் பீரங்கி என்று இப்படி எல்லாம் வைத்திருக்கிறாங்கள். நாம் பூமியில் அந்தரமாகத் தானும் உலா வரமுடியாது என்று சொல்ல வந்தனான்."—

"சரி...சரி... உமது பயத்தை மூட்டை கட்டி வைத்துப் போட்டு என்னுடன் வாரும். என்னதான் நடக்குதென்று பார்ப்பாம்"—.

இயமன் பூவுலகு பயணம் செய்ய ஆயத்தமாகிறார்.

எருமைக்கடா காற்றையும் கிழித்துக் கொண்டு பூவுலகு நோக்கிப் பாய்கின்றது. பிரபோ! இது ஈரான் ஈராக் பக்கம். கீழே இறங்க முயற்சிக்காதேயுங்கோ" குப்தன் அலறுகிறார். போன முறை அவர் தப்பிப் பிழைத்து வந்தது அவருக்குத் தானே தெரியும்.

"என்ன குப்தா எனக்கே பயம் காட்டுகிறாயா?" இயமதர்ம ராஜன் பயங்கரமாகச் சிரிக்கிறார். இயமன் சிரித்த வாய் மூடவில்லை 'டொம' 'டமார்' என்ற சத்தங்கள் யமனின் காதைக் கிழிக்கின்றன. எருமைக்கடா துள்ளிக் கொண்டு ஓடியது. இயமன் கடாவின் கழுத்தைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டார்.

சித்திரகுப்தருக்கு பயத்தால் நா உலர்ந்து போயிற்று. குப்தா அது என்ன சத்தம்? பயத்தை வெளிக்காட்டாமல் சாதாரணமாகக் கேட்டார் இயமனார். அது...... அது ஐயோ கீழே பாருங்க ஆகாயக் கப்பலொன்று தீப்பற்றிக் கீழே விழுகுது. ஐயோ எத்தனை நர ஆத்மாக்கள் இப்ப மேலே போகத் தத்தளிக்கப் போகின்றனவோ குப்தர் அங்கலாய்த்தார்.

"பிரபு பிரபு வேண்டாம் இந்த விபரீத ஆசை. நாம் நம் இடத்துக்குப் போவோம்."

"குப்தா சற்றுப் பேசாமல் இரு நாம் கிழக்குப் பக்கமாக நகர்ந்து போய்ப் பார்ப்போம்.

"பிரபு மேற்கே அமெரிக்காக் கண்டம், கிழக்கே ஆசியாக் கண்டம். இங்கெல்லாம் போக வேண்டாம்."

"அப்படியானால் கண்டங்களை விட்டுத் தீவுகளுக்குப் போவோம் வாரும்."

"ஐயோ தீவா? இந்தப் பக்கம் வேண்டாம் பிரபு."

"குப்தா நீ பெரு கோழை. உன்னைப் போய்க் கூட்டி வந்தேனே, நான் இந்தத் தீவுப் பக்கம் போகத்தான் போறேன். நீயும் என்னுடன் வருகிறாய். குப்தனார் மௌனமானார்.

'குப்தா இது இந்து சமுத்திர கடற் பகுதி தானே?"

"ஆமாம் பிரபு"

"அதோ அது என்ன நடுக்கடலில் மாளிகை?"

"அது, அதுதான் பிரபு போர்க்கப்பல் நாம் அந்தக் கப்பலிலிருந்து சற்றுத் தூரத்திலேயே பிரயாணம் செய்வது நல்லது."

இயமனார் இடியெனச் சிரித்தார்.

"டுமீல்! டுமீல்!! டுமீல்!!! சிரித்த இயமனார் வாய் மூடு முன்னர் யமவாகனமான எருமைக்கடா நான்கு கால்களையும் மேலே தூக்கியபடி கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

குப்தனாரும் இயமனும் அந்தரத்தில் குடுமி கலையக் கலையப் பரிதாபகரமாக மிதந்தார்கள்.

"ஆ்ர்ர்ர்...... ர்... ர்

6 ம் பக்கம் பார்க்க

## மறப்பெண்ணே!

யசோதா பத்மநாதன்

தாயே —
கலங்காதே
உன் மகனை —
ஒரு மறவனை மட்டும்
நாம் இழக்கவில்லையம்மா!
இவற்றை நீ
இழப்பென்று
எண்ணுகிறாய்?
அப்படியென்றால—
நீ
ஒரு பக்கம்தான்
பார்க்கிறாய்
மறுபுறம் பார்!
உன் வாரிசுகள் தான்
அங்கேயும்
சீ......
கண்ணீரைத்
துடைத்துக்கொள்
உன் மகன் அவர்களுக்கு
தன் உயிர் மூலமாக
இலட்சிய பாதைக்கான
ஒளியை
உற்சாகத்தை ...
உத்வேகத்தை ....
ஒரு வெறியை......
நிலையான கலங்கா
உறுதியை
கொடுத்திருக்கிறான்
இன்னுமா கலங்குகிறாய்?
போடி விசரி
உனக்கு நம் பரம்பரை
தெரியுமா?
நாம் —
சங்ககாலத்திலிருந்தே
......பல தாலிகட்டிய
வீரர்கவடி!
நம் புருஷர்கள்
போராடி வென்று
அதன் பலனில் தாலியிட்ட
மறவர்களடி!
நம் பெண்கள் இருக்கிறார்
களே?
உன் பெண்ணும் தான்!
அவர்கள் —
ஆண்களிடம்
போர் தாலிக்கட்டமாட்
டார்கள்
தாம் வேட்டையாடி
வென்ற 'மிருகங்களின்'
பல்லால் தான்
தாலி வேண்டுமென்பார்
கள்
அதனால்
மறப்பெண்ணே
கலங்காதே
உன் பெண் மணமேடை
காணும் நாள்
விரைவில் வரும்

## நேரு பரிவின் உருவினர்

ஒரு நாள் நண்பகல் நேரம். அலகாபாது நகரில் சாலையில் மக்கள் நடமாட்டமோ வண்டிகளின் போக்குவரத்தோ மிகுதியாக இல்லை. சிறுவர்கள் சிலர் அச்சமின்றி சாலையோரத்திலே விளையாடிக் கொண்டிருந்தவர். விளையாடியபடியே சாலை வழியிலும் சிற்சில சமயம் வந்து விடுவார்கள். இதற்கிடையில் சாலையிலே பஸ் ஒன்று வந்து கொண்டிருந்தது. சிறுவர்களைக்கண்ட பஸ் ஓட்டியும் அதைச் சிரமப்பட்டு நிறுத்தினார். ஆனால் ஒரு சிறுவன் கீழே விழுந்து காயமடைந்தான்.

பஸ்ஸில் அமர்ந்திருந்தோர் எவரும் கீழிறங்கிச் சிறுவனுக்கு உதவாமல் உள்ளிருந்தபடியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தச் சமயம் நேரு தம் காரிலே அவ்வழியே வந்தார். ஏதோ விபத்து நடந்தது என்பதறிந்து தம் காரை நிறுத்தச் சொன்னார். நேருஜியைக் கண்டதுமே பஸ்ஸில இருந்தோர் "ஜவாஹர்லால் நேருவுக்கு ஜே" என்று முழங்கினர்.

நேருஜி காரிலிருந்து கீழே இறங்கினார். காயமடைந்த பையனைப் பார்த்தார். அவரது கண்கள் கலங்கின. பஸ்ஸுக்குள் அமர்ந்திருந்தவர்கள் நடந்து கொண்ட விதம் அவருக்கு சற்றும் பிடிக்கவில்லை. அவர்களைப் பார்த்து "எதற்காக ஜே, ஜே" என்று சத்தம் போடுகிறீர்கள்? சிறுவன் ஒருவன் காயமடைந்து தரையில் கிடக்கிறான். அவனுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. வீணே எதற்காக தொண்டை கிழியச் சத்தம் போடுகிறீர்கள் என்று சினத்துடன் கூறினார். இவ்வாறு சொன்னதுடன் நில்லாமல் காயமுற்ற சிறுவனைத் தாமே காரிலே ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார்.

தொகுப்பு: க. கனகராசா (ச. நீ)
ஆதாரம்: கலைமகள்

# பெண்கள் மயமாகி வருதல்

''ஆணும் பெண்ணும் சரிநிசரெனக் கொளவதால் அறிவிலோங்கி இவ்வையம் தளேக்குமாம்.'' என்று பாரதி அன்றே கூறிவிட்டான். பெண் பாதி, ஆண்பாதிபடைத்திருக்கிறுன் ஆண்டவன். சிவம் இன்றேல் சக்தி இல்லை சக்தி இன்றேல் சிவம்இல்லை எனவே இங்கு நாம் பெண் என்ருே ஆண் என்ருே ஒதுக்கி வைபபது நியாயமான ஒன்றல்ல. வரலாற்று ரீதியாகவே பெண்ணுக்கும் உரிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அனைவரும் அறிவர்.

அடுத்து தலைப்பிலே ''பெண்கள் மயமாகி வருகிறது'' எனக் கொடுக்கப் பட்டமை சற்றுச் சிந்திக்கற்பாலதே. தலைப்பின்படி சர்வமும் பெண் மயமானுல் நாடு ஈடாட்டம் காணத் தொடங்கும். அது மட்டுமன்றிச் சமுதாயமோ, அன்றி தேசமோ, வளர்ச்சிப் பாதையில் துரித நடை போட முடியாது. புதிய உத்வேகத்தில் ஒரு சிறிது காலம் வெற்றிப் பாதையில் வீறு நடை போட்டாலும் அவ் வெற்றி நடை தொடர்ந்து போகும் என்பது சாத்தியமான ஒன்றல்ல.

''ஆடிப்பாடி வேலைசெய்தால் அலுப்பிருக்காது அதில் ஆணும் பெண்ணும் சேரா விட்டால் அழகிருக்காது'' என்பதை நாம் அறிவோம். எமக்குத் தேவையான குறிக்கோள் சமுதாய வளர்ச்சியும் தேசிய வளர்ச்சியும் எனக் கருதுவோமாயின் ஆண்/பெண் பேதம் பாராது சரிநிகர் சமானமாகச் செயலாற்ற முன்வரும் பெண்களின் திறமையை நன்கு பயன் படுத்த வேண்டும். அல்லது இவ்வாறு பெண்மயமாகி வருவதன் பாதக விளைவு பற்றிச் சிந்திக்கும் இனம் நாட்டு நலன் கருதியாயினும் மேற்குறித்த செயல்களையோ,

## செல்வி கமலாசினி மாணிக்கவாசகர்

தொழில்களையோ செய்ய முன்வரும் பெண்களின் திறமையைப் பின்பற்றவாயினும் முன் வர வேண்டும். பெண்களிடம் இயல்பில் காணபப-வேண்டிய பொறுமை, தன்னடக்கம், தளரா முயற்சி, அன்பு... போன்ற இன்னேரன்ன குணங்களே மேற்குறித்த தொழில்களில் அவள் சிறக்கக் காரணமாகின்றது என்பதை அனைவரும் அறிவர். தொழிலுக்குத் தேவையானதும் இத்தகைய குணங்களே. எனவே ஆண்/பெண் என்ற அடிப்படையில் பாராது நாட்டின் ரீதியாகச் சிந்திக்கும் போது அது தவருன ஒன்றல்ல, எனவும் நல்விளைவையே தரும் எனவும் கருதுகிறேன்.

உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஆண் பெண் வேறுபாடு இருப்பதைக் கொண்டு தொழில்களையும் பிரிப்பது பொருத்தமானஒன்றல்ல. வீட்டை ஆள்பவள்பெண். நாட்டை ஆள்பவன்ஆண் என்றது அந்தக்காலம். வீடு சிறந்தால்தான் நாடு சிறக்கும் என வாதாடும் வாதிகளையும் அறிவோம். ஆனுல் பொருளியல் ரீதியாக அணுகும்போது தலா வருமானம் அதிகரிக்க வேண்டுமாயின் உழைக்கும் வர்க்கம் அதிகரிக்க வேண்டும். தங்கி வாழ்வோர் தொகை அதிகரிக்கும் எந்தவொரு நாடும் சிறந்து விளங்கியதாக நாம் அறிந்ததில்லை. தலா வருமானம் அதிகரித்தால் தான் தேசிய வருமானம் அதிகரிக்க வாய்ப்புண்டு. எனவே மேலும் மேலும தங்கி வாழ்வோர் தொகையை அதிகரிக்கச் செய்யாமல் உழைக்கும் வர்க்கத்தை அதிகரிக்கச் செய்தலே பொருத்தமான செய்கையாகும். இந்நிலையில் பெண்கள் தமது திறமையில் மேற்குறித்த தொழில்களில் முன்னேறி வருவதை ஊக்குவிக்க வேண்டியவர்களும் நாங்களே யாவோம். கீரைக்கடைக்கும் எதிர்க்கடையிருந்தால் தான் அக்கடை சிறக்கும் என்பது ஆன்ருேர் மொழி அன்ருே.

# 100 வயது தாண்டிய மூதாட்டி முத்தாச்சி



அரியாலையைச் சேர்ந்த நூறு வயதைக் கடந்த முத்தாச்சி, இன்றும் நோய், நொடியின்றி திடகாத்திரமாக வாழ்ந்து வருகிருர். தனது வாழ்வின் வெற்றிக்கான ரகசியங்களை ஈழமுரசு வாசகர்களுடன் அவர் பகிர்ந்து கொள்கிருர்

சந்தித்து எழுதியவர்:

அரியாலை அரஸ்

அந்தக்காலத்தில்நான் பாலில் இருந்து வெண்ணெய்யை எடுத்துவிட்டு மோர்தான் குடிப்பேன். பழந்தண்ணியை மிக விரும்பிக் குடிப்பேன். ஒடியல் பிட்டு, பனங்காய்ப் பணுட்டு நன்ருகச் சாப்பிடுவேன். ஒடியல் பிட்டு என்ருல் தனி விருப்பம். பனங்காய்க் காலத்தில் பனம் பண்டம் நிறையச் சாப்பிடுவேன் ஒவ்வொருவீட்டிலும் பனுட்டுக் கூடைகள் இருக்கும்.

அமெரிக்கன் மாவை அக்காலத்தில் எங்களுக்குத் தெரியாது பாடைக்கு ஒட்டுகிற மா என்று தான் சொல்வோம். இந்தக்காலத்தில்தான் அதிகமாக உண்கிருர்கள். அந்த மாவைப் பசையாக்கி ஒட்டினுலும் நஞ்சென்று பாத்திரத்தோடு தூர எறிந்து விடுவோம்.

எவ்வளவு தூரமானுலும் நடந்துதான் போவேன். மானிப்பாய், இணுவிலிற்குக் கூட நடந்து போயிருக்கிறேன். பஸ் ஓடினுலும் காசு கொடுத்து அவற்றில் ஏறுவதில்லை. முந்தின காலத்தில் தார் போட்ட ரோட்டுக்கள் வலு குறைவு. கண்டி ரோட்டுத்தான் பெரிய ரோட்டாக இருந்தது. மற்றும் படி தார் போடாத ஒழுங்கைகள் தான் அதிகம்.

நாங்கள் முன்புஎடுத்ததற்கெல்லாம் பொலிசு, விதானை, கோட்டடி என்று ஓடுவதில்லை. ஏதும பிரச்சினையென்ருல் ஊரில் உள்ள பெரிய மனிதர் வந்து சமாதானம் செய்வார்கள் அதற்கும் முடியா விட்டால் தான் பொலிசுமார் வருவினம்.

எனக்குக் கோபம் வருவது குறைவு. எந்தப் பிரச்சினையென்ருலும் சமாளித்து விடத்தான் விருப்பம். யாரையும் சண்டை பிடிக்கவும் விடமாட்டேன். முன்னுக்குப் போய்ச் சண்டை பிடிக்காமல் செய்து போடுவேன். நான் எதைச் சொன்னுலும் யாரென்ருலும் கேட்பார்கள் அது ஆண்டவனுடைய செயல்தான்; பத்து ஆம்பிளைகளுக்குச் சமனுய் நிற்பேன்.

சண்டைக் காலத்தில் அதிகமான ஆட்கள் அரியாலை கிழக்கு, மணியன் தோட்டப்பகுதிகளுக்குச் சென்று குழி வெட்டிப் பதுங்கி இருந்தார்கள். நான் போகவில்லை. வைத்தியர்கள் குறைந்த அக்காலத்தில், கடவுளே என்று காய்ச்சல் கூட எனக்கு வருவது குறைவு. அப்படி வந்தாலும் தமிழ் வைத்தியம் தான் செய்வோம. அக்காலத்தில் இருந்த வைத்தியர் ஒருவர் மருந்து தந்த ரென்ருல் பிள்ளை கூடச் சுகமாகப் பிறக்கும் எனக்கு கடவுள் நம்பிக்கை அதிகம்.

7ம் பக்கம் பார்க்க

# குடும்பக் கட்டுப்பாட்டுக்கும் புற்றுநோய் எதிர்ப்புக்கும் பெரிதும் உதவுகின்றன

# வெளவால்கள்

## ★ பால்சண்முகநாதனின் அறிவியற்கட்டுரை

வெளவால்கள் என்ருலே சிலருக்கு வெறுப்பு. ஏன்? அவைகள் துப்புரவில்லையாம், அவைகள் மூலம் பல வியாதிகள் பரவுகின்றனவாம். அவைகள் இரத்தம் குடிக்குமாம். இவைகள் உண்மையான கூற்றுக்களா? வெளவால்களைப் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள அறிவியலாளர்கள் கருததைக் கேட்போம்.

வெளவால்கள் பெரும்பாலும் மரப்பொந்துகளிலும் குகைகளிலும் வாழ்கின்றன. வெளவாலகளை ஆராயும விஞ்ஞானிகள் காடு மேடு வனாந்தரங்கள் மலைகள் குகைகள், எல்லாம் புகுந்து வெளிவர வேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டு வெளவாலகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து கண்டபயன என்ன? குடும்பககட்டுபபாடு, புற்றுநோய் எதிர்ப்பு முதலிய பல வழிகளில் வெளவாலகள் நமக்கு உதவுகின்றன. வெளவால்கள் மிகவும் புத்திசாதுரியம நிறைந்தவை. அவற்றைப் பிடித்து வளர்ப்பதும பழக்குவதும் வெகு சுலபம். பழந்தின்னும் பெரிய இன வெளவால்கள் வளர்ப்பவாகள் தங்களால் வளாககபபடும் நாய்கள் போலவே வெளவால்களும் அன்பும் நன்றியும் உடையவைகளாய் இருப்பதனை அவதானித்துள்ளனர்.

சமுத்திரங்களில் டொல்பின்கள் எவ்வாறு அரசோச்சுகின்றனவோ அதுபோலவே வெளவால்களும் இரவுக் காலத்தை அரசாளுகின்றன. வெளவால்கள் எதிரொலி மூலம் தாம் செல்லும் திசையை அவதானிக்கும் முறையானது இற்றை வரை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்ய முடியாதுள்ளது. வெளவால்களின் உடலளவை ஏனைய பாலூட்டிகளுடன் ஒப்பிடுகையில் இவைகள் தாம் உலகிலேயே நீண்டகாலம் உயிர் வாழும் பாலூட்டிகள் என்று குறிப்பிடலாம். உதாரணமாகச் சில வெளவால் இனங்கள் முப்பதாண்டுகளுக்கு மேல் உயிர்வாழ்கின்றனவாம் இவைகளின் தத்துவத்தைக் கடைப்பிடித்து மானிடமும் அதிக காலம் உயிர்வாழும் முறையினைக் கண்டு பிடிக்கக்கூடும்.

உலகில் தற்சமயம் ஆயிரம் வகை வெள்வால் இனங்கள் உள்ளன. உலகில் உள்ள பாலூட்டிகளின் தொகையில் நான்கிலொரு பங்கை இவை பிடிக்கின்றன. அமெரிக்காவில் மலைக்குகைகளில் மட்டும் 70 கோடி வெளவாலகள் வாழ்கின்றனவாம். உலகிலேயே மிகச்சிறிய வெளவால் தேனீ அளவு இருக்குமாம். இது தாய்லாந்தில் காணப்படுகிறது.

ஒருவகை வெள்வால் இனம் ஆசியாவின் 90 கோடி பழ மரங்கள் காய்ப்பதற்குத் தேவையான மகரந்தச் சேர்க்கைக்கு உதவி செய்கின்றன. அது போலவே விதைகளின் பரவலுக்கும் வெளவால்கள் பெருமளவில காரணமாக அமைகின்றன.

இலுப்பைப் பழங்களையும், கசுக்கொட்டைப் பழங்களையும் சாப்பிட்டுவிட்டு அவற்றின் விதைகளைப் போட்டுவிட்டு வெளவால்கள் போய் விடுவதை நீங்கள் அவதானித்திருக்கலாம்.

நமக்கும் மரங்களுக்கும் கெடுதல் செய்யும் பூசசிகளை உண்பதில் வெளவால்கள் பெயர் பெற்றவை.

நாம் காணும் சாதாரண வெளவால் ஓரிரவில் 3000 பூச்சிகளைக் கபளீகரம் செய்யுமாம்.

மெக்சிகோ இனத்தைச் சேர்ந்த இவளல்கள் 20 இலட்சம் வெளவால்கள் ஒரே கூட்டமாக வாழ்க்கை நடத்துகின்றனவாம். இவைகள் ஓரிரவில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூத்தல் பூச்சிகளை ஒழித்துக் கட்டுமாம்.

குகைகளில் காணப்படும் வெளவால்களின் கழிவு பெரும் பணம் தரும் தொழிலாகி உள்ளது. இது மிகச் சிறந்த எருவாக இருப்பதுடன் உலகின் மூன்றிலொரு பங்கு மிளகு உற்பத்தியில் முக்கிய பங்கை வகிக்கிறது. இந்தியாவில் பாழடைந்த கோவில்களிலும், கட்டிடங்களிலும் சேகரிக்கப்படும் இவ்வகை எரு பெரும் பண வருவாயை ஈட்டிக் கொடுக்கின்றது.

# இயமனின் பூவுலக...

—5-ம் பக்கத் தொடர்

என்று இரைந்தபடி எதிரே வந்த ஆகாய விமானம் ஒன்று இயமனுர் கையை பின்புக்கம் தள்ளி விட்டுப் பறந்து விட்டது ஒரு கையை வீசி வீசி முக்கி முனகியபடி வானத்தில் மிதந்தார் இயமனுர். குப்தனுரும் தனது தலைவிதியை நொந்தபடி அவருடன் அந்தரத்தில் மிதந்தார்.

''குப்தா மானிடர்களுக்கு எம்மைப் போல வானததில் மிதக்கும் சக்தி மாத்திரம் வந்திடக்கூடாது. வந்தால் நரனிடம் இருந்து நாம் தப்ப முடியாது. மூச்சு வாங்கியது இயமனுருக்கு.

பிரபு அதையும் தான் அவன் செய்கிறுன். 'பரிதாமாகச் சொனனுர் குப்தனுர்.

''ஆ ...நீர் என்ன சொல்கிறீர் குப்தரில் இப்போது இயமனுக்கு மதிப்பு வந்துவிட்டது.

'பிரபு எமது இயமலோகம் போய்க் கதைப்போம். இப்போது கூட நரன் இங்கு எங்கு என்ருலும் மிதந்து கொண்டிருப்பான். நாம் கதைத்தால அந்தச் சத்தத்தை பதிவாக்கி அதைததொடர்ந்து அவனும் வந்து நம்ம உலகத்துக்குள்ளேயே புகுந்து விடுவான். ஆகையால் நாம மௌனமாகப் போவதுதான் நலலது''

''குப்தா நீர் எவ்வளவுபுத்திசாலி என்று இப்போதுதான் தெரிந்து கொண்டேன். நர ஆத்மாக்களைக்கூட இனி எமது லோகத்துக்குள் விட்டால் ஆபத்துத்தான்.''

இயமனுர் வெகு வேகமாக இயமலோகம் நோக்கி விரைந்து கொண்டிருந்தார்.

ஆசியா, ஆபிரிக்கா மற்றும் பசிபிக் பிராந்தியங்களில் வெளவால்கள் மக்களால் விரும்பி உண்ணபபடுகின்றன.

குவாம் தீவிலுள்ள வெளவால் உணவுககுப் பேர்பெற்ற உணவுச்சாலையில் உணவின் விலை இருபத்தைந்து அமெரிக்க டொலர்களாம்.

# அடையாள அட்டையை எங்கே, எவ்வாறு, எப்படிப் பெற முடியும்?

(1) எத்தனை வயது பூர்த்தியான பின்னர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்? பதினறு வயது.

(2) அடையாள அட்டையைப் பெறுவதற்கு யார் யார் தகுதியுடையவர்கள்? விசா வைத்திருப்பவர்கள், வதிவிடப் பத்திரம் வைத்திருப்பவர்கள். விசா இல்லாமல் இருக்கக்கூடியவர்கள், கள்ளக் குடியேற்றக்காரர், காலஎல்லை கடந்து வசிப்பவர்கள் முதலியோர் தவிர்ந்த ஏனையோர் பதினறுவயது பூர்த்தியடைந்ததும் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(3) விண்ணப்பிப்பதற்குரிய விதமான விண்ணப்பப் படிவங்கள் உள? மூன்று. 1. முதல் முறையாக புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல்-படிவம் ''ஆ'' வெள்ளை அல்லது மஞ்சள் நிறம். 2 அடையாள அட்டை தொலைத்தவர்கள் பிரதி அட்டைக்கு விண்ணப்பித்தல்-படிவம் ''உ'' பச்சை நிறம், 3. சேதப்பட்ட/உருவழிக்கப்பட்ட/தெளிவற்ற/மாற்றங்கள் செய்ய வேண்டியவற்றிற்கான பிரதி அட்டைக்கு விண்ணப்பித்தல் படிவம் ''ஊ'' சிவப்பு பிங்) நிறம்.

(4) அடையாள அட்டையைப் பெறுவதற்கு யாருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்? 1 கிராமசேவை அலுவலருடன். 2 பாடசாலை மாணவர்கள்-அதிபருடன்.

(5) அடையாள அட்டையைப் பெறுவதற்கு என்ன என்ன ஆவணங்களை/பத்திரங்களை கிராம சேவை அலுவலகரிடம் சமர்பிக்க வேண்டும்? 1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்-மூழுமூலப்பிரதி 2. புகைப் படங்கள மூன்று. 3. பெற்றோரின் அடையாள அட்டைகள் 4 விண்ணபதாரி பெண்ணுயின் விவாக அத்தாட்சிப் பத்திரம் 5. பதிவுப்பிரசையாயின் பிரஜாவுரிமைச்சான்றிதழ் 6. இந்தியப்பிரசையாயின் உணவு முத்திரை, /இந்தியா அவசரகாலகட்வுச்சீட்டு. தோட்டப்பற்றுச்சீட்டு முதலியன இருப்பின்.

(6) எத்தனை ரூபா முத்திரை விண்ணப்பததில் ஓட்டி இரத்துச் செய்யப்படல் வேண்டும்? புதிப அடையாள அட்டைக்கு: 1 பதினறு வயதிற்கும் பதினேழு வயதிற்கும இடைப்பட்டவாகள் ரூபா மூன்று. 2. பதினேழு வயது பூர்த்தியடைந்தவர்கள். ரூபா 13 பிரதி அடையாள அட்டைக்கு எல்லோரும் ரூபா,15.

(7) இதற்கான புகைப் படங்கள் எங்கே எடுக்கவேண்டும்? திணைக்களத்தினல் அங்கீகரிக்கப்பட்ட புகைப்படப்பிடிப்பாளரிடம் எடுக்க வேண்டும்.

(8) பெற்றோரிடம் அடையாள அட்டை இல்லாத இடத்து அல்லது தொலைந்து போயிருக்குமாயின் பிள்ளைகள் அடையாள அட்டை பெற முடியாதா? 1. பெறமுடியும் 2. பெற்றோரும் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(9) வாக்குப் பதிவு விபரங்கள் பெறுவது எப்படி? 1. கிராம சேவை அலுவலர்களிடம் அவர்கள் பிரிவுக்குரிய விபரங்கள் உள. அவற்றின் மூலம் இவை பெறப்படும் 2. விண்ணபதாரிக்கு வாக்குப் பதிவு இருப்பின் பெற்றோரின் வாக்கு விபரங்களோ அல்லது அடையாள அட்டை விபரங்களோ தேவைப்படா; விண்ணப்பதாரி வாக்காளராக இல்லாதவிடத்து பெற்றோரின் வாக்கு விபரம்/அடையாள அட்டைவிபரம்தேவையாகும். பெற்றோருக்கு ''X'' அடையாள அட்டை இருக்கும் இடத்திலும் அவர்களது வாக்கு விபரம் கொடுபடல் வேண்டும்

(10) அடையாளஅட்டையில் இருக்கும் ''X'', ''V'' என்ற எழுத்துக்களின் விளக்கங்கள் என்ன? 1.''V'' எழுக்து இருப்பின் இலங்கைப்பிரசையென நிருபிக்கப்பட்டுள்ளது.2. ''X'' எழுந்து இருப்பின் இலங்கைப் பிரரையென்பது நிருபிக்கப்படவில்லை.

(11) ''X'' எழுத்துடன் அடையாள அட்டையை வைத்திருக்கும் இலங்கைப் பிரசைகள் எவ்விதம் ''V'' ஆக மாற்றுவது? ''ஊ'' படிவத்தில் விண்ணப்பித்தல் மூலம்

(12) ஒரு முறைக்கு மேல் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்கல் குற்றமா? ஆம், தண்டனைக்குரிய குற்றமாகும் இதை கிராமசேவை அலுவர்சளும் பாடசாலை அதிபர்களும் விண்ணப்பதாரிகளுக்கு விளக்க வேண்டும்.

(13) பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் முழு மூலப்பிரதி ஏன் தேவைப்படுகிறது? 1. மாற்றீடுகளைக் தவிர்ப்பதற்காகவே புகைப்படப்பிரதிகள் ஏற்கப்படுவதில்லை மூலப்பிரதியே கேட்கப்படுகின்றது.

2. பிறப்பு அத்தாட்சிப்பத்திர முழுப்பிரதியிலேயே விண்ணப்பதாரியின், பிதாவின் முழுப்பெர்கள், பிறந்த திகதி, பிறந்த இடம், இனம் முதலியன பெறப்படுகின்றன சுருக்கப்பிரதியில் இனம் கொடுக்கப்படுவதில்லை. இத் தகவல்களின் ஒருமைப்பாடு அடையாள அட்டையிலும் காணப்படல் வேண்டும். ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பின் அத்தகைய அட்டைகளால் பயனில்லை.

(3) அடையாளஅட்டைகளில் 9 இலக்கங்கள் காணப்படுகின்றன: இதில் முதல் இரண்டு இலக்கங்களும் பிறந்த வருடத்தின் கடைசி இரண்டு இலக்கங்களைக் குறிப்பன. 1931ம் வருடம் பிறந்த வருடம் ஆயின் முதல் இரண்டு இலக்கங்களும் 31 என அமையும். அடுத்த வரும் மூன்று இலக்கங்களும் பிறந்த திகதியைக் குறிக்கின்றன தை 1ம் திகதியாயின் 001 என அமையும். மார்கழி 31ம் திகதியாயின் 366 என அமையும்

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் அடையாளஅட்டை, மிக மிக முக்கியமான ஒரு அத்தாட்சிப்படுத்தும் ஆவணமாக இப்போது. விளங்குகிறது. குறிப்பிட்ட ஒரு வயதைக் கடந்த அனைவருமே அடையாள அட்டை வைத்திருக்க வேண்டியது அவசியமாகியுள்ளது. இதனை எவ்வாறு பெறுவது இதன் பலாபலன்கள் என்ன என்பது போன்ற பல கேள்விகளுக்கு யாழ்ப்பாணம் அரசாங்க செயலக ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் தந்துள்ள பதில்கள், ''கேள்வி-பதில்'' முறையில் பிரசுரமாகின்றது யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் அவர்களின் அனுசரனையுடன் இவ் விபரங்கள் பிரசுரத்திற்காகச் சேகரிக்கப்பட்டன.

ஆகவே வருடத்தில் முறையே 1ம் நாளிலும் 366ம் நாளிலும் பிறப்பு சம்பவித்ததாக அறிய முடிகின்றது இப்பொழுது முதல் ஐந்து இலக்கங்களையும் முறையே 31 001 எனவும் 31 366 எனவும் கண்டு கொண்டோம். அடுத்து வரும் மூன்று இலக்கங்களும் எந்தத் தினத்தில் எத்தனையாவது நபராகப் பதியப்படுகின்றார் எனக் காட்டப்படுவன. ஒரு தினத்தில் ஒதுக்கக்கூடிய இலக்கங்கள் ஆண்களுக்கு 999ம். பெண்களுக்கு 999ம் ஆகும் ஆகவே இலக்கங்களின் வீண் விரையத்தைத் தடுப்பது மிகவும் முக்கியம். எல்லோரும் தத்தமது இலக்கங்களை ஞாபகமாகவும் கவனமாகவும் பதிந்து வைப்பது அவர்களின் முக்கிய கடமையாகும்.

மேற்குறிப்பிட்ட இரு நாட்களில் 999 ஆகப் பதியப்பட்டவரின் முதல் எட்டு இலக்கங்களும் முறையே 31 001 999 எனவும் 31 366 999 எனவும் அமையும். ஒன்பதாவது இலக்கம் கொப்பியூட்டர் மூலம் கணிக்கப்படுகின்றது. இந்த ஒன்பது இலக்கங்களைத் தொடர்ந்தே ''V'' ''X'' என்ற எழுத்துக்களில் ஒன்று காணப்படும்.

(14) ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு இலக்க வரிசைகளிலா அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன? பிறந்த திகதியைக் குறிக்கும் எண்களைப் பொறுத்த மட்டில் ஆம் என்றே சொல்ல வேண்டும்.

(15) அடையாள அட்டை தொலைந்தால் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன? அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை கொடுத்து அந்த முறைப்பாட்டுப் பிரதிகள் இரண்டினைப் பெற்றுக் கொள்ளல். இதற்காகப் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகளை பதிவதற்கென புறம்பான பதிவேடுகள் திணைக்களத்தினல் வழங்கப்பட்டுள்ளன. இம் முறைப்பாட்டுக்கு அடையாள அட்டையின் இலக்கம் அவசியமாகும். இது சரியாக கொடுக்கப்படும் இடத்து விரயம் தவிர்க்கப்படுகின்றது. பிரதிஅட்டையும் துரிதமாக வழங்கப்படுகின்றது. முறைப்பாட்டில் இலக்கம் கொடாதவிடத்து இலக்க விரயம் ஏற்படுவதுடன் தாமதமும் தவிர்க்க முடியாதிருக்கின்றது. பதிவேடுகளைத் தேடும்போது தாமதம் ஏற்படுகின்றது. புதிய இலக்கம் கொடுக்கும்போது இலக்க விரயம் ஏற்படுகின்றது. பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதியுடன் கிராம சேவை அலுவலரிடம் சென்று பச்சைப் படிவத்தில் பிரதி அட்டைக்கு விண்ணப்பித்தல்.

(16) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் என்ன செய்வது? உண்மையிலே ஒருவரினது பிறப்புப் பதியப்படவில்லையென்றே அல்லது அவரது பத்திரம் உருக்குலைந்து விட்டது என்று நிருபிக்கப்படுமிடத்து அவர் தனது பிறந்த திகதியை பிரஜாவுரிமைப் பத்திரம். உத்தேச வயது அத்தாட்சிப் பத்திரம், பாடசாலை விடுகைப்பத்திரம், கடவுச்சீட்டு, சாதகம். ஞானஸ்நான க்சான்றிதழ் முதலியனவொன்றினல் நிருபிக்கலாம். இவை ஒன்றும் இல்லாதவிடத்து சத்தியக் கடதாசியாவது சமர்ப்பிக்க வேண்டும்.

(17) முகவரியின் அவசியம் என்ன? இது அடையாள அட்டையில் பொறிக்கப்படுகின்றது ஆகவே சரியான அஞ்சல் முகவரியைக்கொடுத்தல்வேண்டும். திணைக்களம் தொடர்பு கொள்ளவோ அடையாள அட்டை தொலைந்த இடத்து உரியவரிடம் சேர்ப்பிப்பதற்கோ உதவும்.

(18) ஒருவர் அடையாள அட்டையை பத்து வருடங்களுக்கு முன், கொழும்பில் இருந்த பொழுது பெற்று இப்பொழுது யாழ்ப்பாணத்தில் தனது சொந்த இல்லத்தில் வசிக்கின்றார். அப்படியாயின் முகவரியை எவ்வாறு மாற்றலாம்? சிகப்பு – பிங் – படிவத்தில் விண்ணப்பித்து கையிலிருக்கும் அட்டையையும் ஒப்படைக்க வேண்டும். சரியான முகவரியுடன் பிரதி அட்டை வழங்கப்படும்.

(19) தொழிலின் முக்கியத்துவம் என்ன? இது அடையாள அட்டையில் பதியப்படுகின்றது இத்தகவல் விண்ணப்பதாரிக்கு உதவியாகவும் இருக்கும்.

(20) ஒருவரின் தொழில் மாற்றம் ஏற்படும்போது எவ்வாறு அடையாள அட்டையை மாற்றுவது? சிகப்பு- பிங்- படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும். கையிலிருக்கும் அட்டையை ஒப்படைப்பதுடன் தொழில் மாற்றத்தை நிருபித்துச் சான்றிதழ் ஒன்றினையும் இணைக்கவேண்டும், புதிய தொழிலைக் குறித்துப் பிரதி அட்டை வழங்கப்படும்.

(21) விண்ணப்பிக்குமிடத்தில் வாக்கு விபரம் இல்லாதவிடத்து என்ன செய்வது? வாக்குப்பதியப்பட்ட இடத்தில் உறுதிப்படுத்தப்பட்ட வாக்கு விபரத்தை அப்பகுதிக் கிராம சேவையாளரிடம் பெற்றுச் சமர்பிக்கலாம்.

(22) விவாக நிலையின் முக்கியம் என்ன? விவாகமானவர்கள் கணவன்/மனைவியின் பெயர்களைக் கொடுப்பது அவசியமாகும். பெண்கள் அனேகமாக கணவன் பெயராலே வழங்கப்படுகின்றனர். ஆதலால் அவர்களின் விவாகச் சான்றிதழ்கள் இருப்பின் சமர்ப்பிப்பது நன்றாகும்

(23) முத்திரைகள் எவ்விதம் இரத்து செய்தல் வேண்டும்? உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் கிராம சேவை அலுவலகர் ஆவர். முத்திரையின் மேல் அவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பம் இட்டு இரத்துச் செய்தல் வேண்டும் முன் கூறியபடி முத்திரைக்கட்டணம் ஒன்றில் ரூபா மூன்றாக அல்லது ரூபா பதின்மூன்றாகவே அமையும்.

(24) படம் எப்படி எங்கு எடுத்தல் வேண்டும்? கிராம சேவையாளரிடம் திணைக்களத்தினல் அங்கீகரிக்கப்பட்ட புகைப்படப்பிடிப்பாளர் யார் என்பதனை அறிந்து கொள்ளலாம் இதற்குரிய பத்திரத்தைக் கிராமச் சேவகரிடம் பெற்றுப் படப்பிடிப்பாளரிடம் செல்லுதல்அவசியமாகும். அப்படிச் செய்யுமிடத்து படம் சரியான முறையில் எடுக்கப்படும். அத்துடன் விண்ணப்ப இலக்கம் படத்தின் பின் பக்கத்திலும் படங்கள் இணைக்கும் உரையில்குறிப்பிடப்படும்.

(25) படத்திற்குக் கட்டணம் எவ்வளவு? திணைக்களத்தினல் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மூன்று பிரதிகளுக்கும் ரூபா ஐந்து ஆகும்.

(26) பற்றுச்சீட்டுப் பெறுவது எப்படி? விண்ணப்பத்திலுள்ள ஒரு பகுதியைக் கிராம சேவை அலுவலகர் பூர்த்தி செய்து விண்ணப்பதாரரிடம் கிழித்துப் பற்றுச்சீட்டாகக் கொடுப்பார். இதை அடையாள அட்டை கிடைக்கும் வரை கவனமாக வைத்திருத்தல் வேண்டும்.

(27) அடையாள அட்டை பெறுவதன் கால எல்லைஎன்ன? முதல் முறையாக விண்ணப்பிக்கும் படிவங்கள் இருவகைப்படும், ஒன்று சாதாரணம், மற்றது அவசரமாகும். சாதாரண விண்ணப்பங்கள் கிழமைக்கு ஒரு முறையாக கிராம சேவை அலுவலரால் உதவி அரசாங்க அதிபருக்கும், பின் அவரிடமிருந்து யாழ் கச்சேரி. ஆட்பதிவுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தருக்கும் அனுப்பி வைக்கப்படும். விண்ணபபம் ஒன்று அவசரமாக்குமிடத்து இதற்குரிய காரணத்தை எழுதது மூலம்காட்டி அதற்குரிய ஆவணங்களுடன் விண்ணப்பதாரி கிராம சேவை அலுவலருக்கு மனுச்செய்தல் வேண்டும். கிராமசேவை அலுவலரின் சிபார்சுடன் உடனுக்குடன் விண்ணபதாரியூடாகவே இப்படிவங்கள் உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படும்; பின் அவரது சிபார்சுடன் இவ்விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலம் நிர்வாக உத்தியோகத்தருக்கு அனுப்பப்படும். இதற்குரிய அஞ்சல் கட்டணம் விணணப்பத்தாரரிடம் அறவிடப்படும் அத்துடன் அவசர விண்ணப்பங்களுக்கு சுயவிலாசமிடப்பட்டதும் ரூபா 4/60 உரிய முத்திரை கொண்டதுமான கடித உறையொன்றும் விண்ணப்பதாரியி

—8ம் பக்கம் பார்க்க

## 100 வயது தாண்டிய....

—6ம் பக்கத் தொடர்ச்சி

பஞ்சம், பசி என்று எங்களுக்குத் தெரியாது. ஒரு ஆம்பிளைக்கு நாட்கூலியாக அறுபது சதமும், மாதச் சம்பளமாக 23 ரூபாவும் கொடுப்பார்கள், எள்ளு, உழுந்து,குரக்கன், எல்லாம் கிடைக்கும். பதினைந்துசதம் கொண்டு போனல் எல்லாப் பொருட்களும் வாங்குவோம். இருபத்தைந்து சதத்திற்கு மேல் வாங்கமாட்டோம். ஒரு மூட்டை அரிசி பத்து ரூபாவரும் .ஒருபறை அரிசி மூன்று ரூபாவுக்கு வாங்கலாம். ஒரு கொத்து அரிசி முப்பது சதம்தான். இந்தியாவில் இருந்து இளம்பாடி, கடுகு, சென்னம், கோரங்கி என்றஅரிசி வகைகளும், அரியாலை கிழக்கில் இருந்து மொட்டைக்கறுப்பன் என்ற அரிசியும் வரும் ஒரு பங்கு ஆட்டிறைச்சி மூன்று ரூபாவுக்கு வாங்குவோம். குடும்பம் குடும்பமாகச் சூடைமீன் விற்பார்கள். மீனும் நல்லமலிவாக இருக்கும் என்று சொல்லி முடித்தார். முத்தாச்சி.

ஈழமுரசு

## எம். ஜி. ஆர். தனியாக பதவியேற்றது சரியானதே என்கிறுர் ஆளுனர்

தமிழ் நாட்டின் மற்றைய அமைச்சர்களில்லாது முதலமைச்சர் எம். ஜி ஆருக்கு மட்டும் தாம் பதவிப் பிரமாணம் செய்து வைத்தது அரசியல் திட்டத்திற்கு முரணுனது அல்லவென தமிழ் நாடு ஆளுனர் குரானு நேற்றுத் தெரிவித்தார். இம் மாதம் 10ம் திகதி முதலமைச்சருக்கும் 14ம் திகதி ஏனைய அமைச்சர்களுக்கும் தாம் பதவிப் பிரமாணம் செய்து வைத்த போது தமிழ் நாட்டில் சட்ட பூர்வ அரசு இ க்கவில்லை என்ற குற்றச் சாட்டை ஆளுநர் மறுத்தார் இவை சம்பந்த மாக இந்திய சட்ட மா அதிபர். தமிழ் நாடு அட்வகேட் ஜெனரல் ஆகியோரைக் கலந்தாலோசித்து இந்திய அரசியல் திட்டத்தை அநுசரித்தே தாம் முடிவினை மேற்கொண்டதாகவும் திரு. குரானு தெரிவிததார்.

ஜனுதிபதி ஜெயில்சிங் கவலை :

# அண்டை நாடுகளின் ஆயுத குவிப்பால் பாரத பாதுகாப்பு அபாயகர நிலையில்!

அண்டை நாடுகளில் நவீன ஆயுதங்கள் குவிக்கப்பட்டு வருவதும், வல்லரசுகள் தாராளமாக நவீன ஆயுதங்களை வழங்கி வருவதும் பாரதத்தின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவருகின்றதென்று ஜனுதி தி ஜெயில்சிங் கவலை தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்தரப் பிராந்தியத்தில் வல்லரசுகளின்போட்டி அதிகரித்து வருவதும் பாரதத்தின் பாதுகாப்புக்கு விடுக்கப்படும் சவாலாக அமைந்துள்ளதெனவும் ஜனுதிபதி எச்சரித்தார்.

போட்பேரில் ஐ. எம். எஸ். ஜெர்மன்கப்பலொன்றில் பாதுகாப்புப் படைகளிடையேபேசுகையிலேயே ஜனுதிபதி மேற்கண்ட விபரங்களைத் தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் பேசுகையில்,

எத்தகைய நிலைமையையும் சமாளிக்க நாடு தயாராக இருக்க வேண்டும், சுய ஆட்சி உரிமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கத் தயாராக இருந்தாலன்றி நாடுமுன்னேற முடியாது. அதேவேளை அண்டை நாடுகள் பலவீனமாக இருப்பதைப் பாரதம் விரும்பவில்லை ஆனுல் நமது அண்டை நாடுகள் பாரதத்துடன் நட்புறவு கொள்வதை விரும்பவில்லை'' என்றும் குறிப்பிட்டார்.

## இரு கொள்ளைகள்

நேற்று முன்தினம் இரவு சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் தட்டச்சு யந்திரங்கள், உட்பட மற்றும் உபகரணங்கள் பணம் ஆகியவை இனம் தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கரடியனுறு விவசாயப்பண்ணையிலும் பழைய ட்ராக்டர் ஒன்று சிலரால் எடுத்துச் செல்லப்பட்டது. முன்னரும் இங்கு ஒரு ட்ராக்டர் கடத்திச் செல்லப்பட்டது.

தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் அறிக்கை:

## மக்களால் பதவியில் அமர்த்தப்பட்ட ஒருவரைக் கடத்துவதா?

வேலணை பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. என். பாலச்சந்திரன் கடத்தப்பட்டமையைக் கண்டித்து, அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு சு. சிவமகாராசா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வறிக்கையின் விபரம் வருமாறு:

வேலணை ப.நோ.கூ. சங்கத்தலைவர் திரு. நா. பாலச்சந்திரன் கடத்தப்பட்டார் என்பதை அறிந்த பொழுது அதிர்ச்சி அடைந்தேன் பொது மக்களால் பொறுப்புள்ள பதவியில் அமர்த்தப்பட்டவரைக் கடத்திச் செல்வது பொறுப்பற்ற செயலாகும் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்டவர் தவறு இழைத்தால் அவர் செய்த தவறுகளை வெளிப்படுத்தி அவரை பொது மக்கள் மூலமே இறக்கப்பட வேண்டும் இதை விடுத்து மனிதாபிமானமற்ற முறையில் ஒருவரைக் கடத்திச் செல்வது அநீதியானது.

நான் அறிந்த வரையில் வேலணை ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு நா. பாலச்சந்திரன் இலட்சிய பற்று மிகுந்த துணிச்சல் மிக்க தலைவர். இவ்வாறன ஒருவரைக் கடத்திச் செல்வது எமது பண்பாட்டிற்கே உகந்ததல்ல அதுமட்டுமன்றி இல சிய பற்று மிக்க அணிகள் மீது பொது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை குறைத்துவிடும் வெறுப்பைத் தான் சம்பாதிக்க நேரிடும்.

கூட்டுறவாளர் மத்தியில் மனக்கசப்பை, விரக்தியை ஏற்படுத்திக் கொள்ள இடமளிக்கக்கூடாது. ஆவே வேலணை ப.நோ கூ சங்கத் தலைவரை யார் கடத்திச் சென்ருலும் அவரை உடனே விடுதலை செய்யுமாறு அன்பாக வேண்டுகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 28-ம் திகதி பென்ஷன்

உருப்பராய், கொக்குவில், சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு இருபத்தைந்தாம் திகதி தங்கள் வழங்கப்படவிருந்த பென்ஷன் நேற்று இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தால் இம்மாதம் இருபத்தெட்டாம் திகதி வியாழக் கிழமை வழங்கப்படவுள்ளது,

## புகழ் பெற்ற சட்டத்தரணி கே. வி. 'நடா' காலமானுர்

(உடுப்பிட்டி)

பிரபல வழக்கறிஞரான திரு. கே. வி. நடராசா நேற்று முன்தினம் கொழும்பில தமது அறுபத்தேழாவது வயதில் காலமானுர். கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தமது ஆரம்பக் கல்வியை கரவை விக்னேஸ்வராக் கல்லூரியிலும், பின கொழும்பு செனட் யோசப் கல்லூரியிலும் உயர் கல்வியை முடித்த இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக எம். ஏ. பட்டதாரியானுர். இங்கிலாந்து இன்னர் டெம்பிள் சட்டக் கல்லூரியில் பாரிஸ்டர் பட்டமும் கிடைத்தது.

இலங்கையில் சில காலம் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து சில வழக்குகளை வெற்றியீட்டி புகழ் பெற்ருர். பெர் முடாவின் நீதியரசராகவும், ஸாம்பியாவில் அட்டர்னி ஜெனரலாகவும் பதவி வகித்த தமிழராவர்.

கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரத்தின் மாமனும், யாழ். பிரதம கல்வியதிகாரி திரு. வி. சபாநாயகத்தின் மைத்துனரும், பிரபல மகப்பேற்று வைத்திய நிபுணர் செல்வ சிவா சின்னத்தம்பியின் சகோதரரும் ஆவார்.

தகனக் கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு கனத்தை மயானத்தில் நடை பெறும்.

## ஆசிரிய இடமாற்றம்

## 10 வருட சேவைப் பட்டியல் இவ் வாரத்தில் வெளிவரும்

1985ம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரிய இடமாற்றத் திட்டத்தின் கீழ் பத்துவருட சேவையை முடித்தவர்களின் பட்டியல் இவ்வாரம் வெளிவருமென்றும், மார்ச்முதலாம் திகதி அமுல் செய்யப்படக் கூடியதாக இப்பட்டியல் தயாரிக்கப்பட்டதாகவும் தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்தவாரம் கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி கே. ஜெயக்குமாரையும் செயலாளர் எம். எஸ். ஆரியரத்தினவையும் திரு. மகாசிவமும், சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு அருணகிரிநாதரும் சந்தித்து இடமாற்ற விவகாரங்கள் பற்றி உரையாடினர்.

இரண்டாவது இடமாற்றப் பட்டியலொன்று மார்ச் 16ம் திகதியளவில் வெளிவருமென்றும். ஆறு வருட வெளிமாவட்டச் சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் இதில் இடம்பெறுவர் என்றும் திரு மகாசிவம்மேலும் தெரிவித்தார்

### முன்னர் தோற்றுத ..

விலலையோ அந்தப் பாடங்கள் அனைத்துக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

ஏறகனவே அவர்களுக்கு வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையில் சில பாடங்களுக்கு மட்டுமேகுறிப்பிட்டிருந்தாலும், ஒவ்வொரு மாணவரும் முன்னா தோற்ருத சகல பாடங்களுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவர் என்று கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனுப எம். எம். மன்சூர் அறிவிததுள்ளார்.

பரீட்சைத் திணைக்கள ஆணையாளர்வழங்கிய அனுமதியுடன் இவ் ஏற்பாடு செயயப்பட்டுள்ளது.

### வங்கி கவச...

—1ஆம்- பக்கத் தொடர்

தப் பட்டதாகத் தெரிகின்றது,

இக் கொள்ளையினுல் ஆசிரியாகள் தமது சம்பளத்தையும், பென்ஷன் காரர் தமது ஓய்வூதியத்தையும் பெறமுடியாது வெறுங் கையுடன் திரும்பினர். இவர்களுக்கு மீண்டும் எப்போது இப் பணம் வழங்கப்படுமென்று அறிவிக்கப்படவில்லை.

ஜனவரி மாதம் 31ம் திகதியும இதுபோல பணத்துடன் வான் கடத்தப்பட எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.

### முடமாவடியில்...

— 1-ஆம் பக்கத் தொடர்

போட்டோ நிறுவனத்தின் கண்ணுடிகள் சுக்கு நூருக்கப் பட்டன. பல கட்டங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது இதனுல் கோவில் வீதி. முடமாவடிப்பகுதிகளில் நேற்றிரவு வரை பெரும் பதற்றம நிலவியது.

### பருத்தித்துறை ..

—1ஆ-ம் பக்கத் தொடர்

பரீட்சையின்போது வேறு நிலையங்களில் பரீட்சை எழுத ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

இதன்படி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலைக்குச் செல்ல வேண்டும்.

பருத்தித்துறை மெதடிஸ்த முதலாம் இரண்டாம் மண்டபங்களில் தோற்றியவர்களுக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும், மூன்ரும் நான்காம் இலக்க மண்டபங்களில் தோற்றியவர்களுக்கு புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இம்முறை பரீட்சை நடாத்தப் படும்.

இவர்களுக்கான பிரவேச அட்டைகள் நாளை திங்கட் கிழமை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும், புற்றளை மகாவித்தியாலயத்திலும் வழங்கப்படும்.

வல்வெட்டி துறை சிதம்பராக் கல்லூரியின் முதலாம் மண்டபத்தில் தோற்றியவர்களுக்கு உடுப்பிட்டி ஆண்கள் கல்லூரியிலும், இரண்டாம் மண்டபத்தில் தோற்றியவர்களுக்கு உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியிலும் இப் பரீட்சை நடைபெறுமென்று யாழ். மாவட்ட பிரதம கல்வியதிகாரி திரு வி. சபாநாயகம் தெரிவித்தார்.

### சுடப்பட்டதால்...

—1-ஆம் பக்கத் தொடர்

பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

முடமாவடிசசந்தியில்மோட்டார் சைககிள வாலிபா ஒருவர் சூடுபட்டு மரணமானுர்.

கந்தர்மடம் பகுதியில் மகாக்குவிலைச் சேர்ந்த யோகலிங்கம் என்பவர் மரணமானதாகவும் தெரியவந்துள்ளது மறறொருவரின் சடலம் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியல் ஒப்படைக்கப் பட்டுள்ளதாம்.

நல்லூர் அரசடியைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுமியான ஜி. பிரியதாசினிகு படுக்காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் மற்றும் சுன்னுகம் கிருஷ்ணபிள்ளை தெய்வேந்தரம் (30), நல்லூர் எம் ஐயனுர் (27), அரசடி வி. முரளீதரன (23), செனபற்றிகஸ் வீதி அலரன் (30), கைதடி வி. தம்பிராசா (31) ஓட்டுமடம் ஏ. உதயகுமார் (21) ஆகியோரும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

### இருவரையும்...

—1-ஆம் பக்கத் தொடர்

பிள்ளைகளின தந்தையாவார். திரு. கிருபதிலகனுககு இரண்டு பிள்ளைகளுண்டு.

இவர்கள் கடத்தல் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட மதத் தலைவர்கள், பொதுமக்கள், அரசாங்க ஊழியர்கள் கூட்டாக விடுத்துள்ள வேண்டுகோளில் மனிதாபிமானத்தின் பெயரால் இரண்டு அதிகாரிகளையும் விடுதலை செய்யுமாறு கோரியுள்ளனர்.

### முரண்பாடுகளை...

—1-ஆம் பக்கத் தொடர்

டப்பட்ட துண்டுப் பிரசுரம் தமக்கு ஆச்சரியத்தினையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரியவித்துள்ள ரெலோ தோழர் நேருவைப் பற்றிய சரியான விபரங்களைத் திரட்டத் தங்கள் நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிடடுள்ளது.

''தலைவர் தங்கத்துரையின் வழிநடத்திலில் உதித்த நாம் கருத்து முரண்பாடுகளை துப்பாக்கி முனையில் தீர்ப்பவர்கள் அல்லர்'' என்றும் இப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அடையாள அட்டையை...

—7ம் பக்கத் தொடர்

னுல் இணைக்கப்பட வேண்டும். இவையாவும் கூடிய விரைவில் பாிசீலனை செய்து அனுமதிக்கப்படும், விண்ணப்பங்கள் கொழும்பு ஆள்பதிவு ஆணையாளருக்கு கிழமைக்கு ஒருமுறையாக பதிவு அஞ்சலில் அடையாள அட்டை வநியோகத்திற்காக அனுப்பப்படும்.

(28) குறைபாடுகள் உடைய விண்ணப்பங்களினதும் அனுமதிக்கப்படாத விண்ணப்பங்களினதும் நிலை என்ன? குறைபாடுகள் உள்ளவையாவும் உதவி அரசாங்க அதிபருககு நிவர்த்திக்காக மீண்டும் திருப்பி அனுப்பப்படும். அனுமதிக்க முடியாத விண்ணப்பங்ளுக்குரியவர்கள் யாழ் கச்சேரிககு விசாரணைக்காக அழைக்கப்படுவர். அப்படி அழைப்பைப் பெறுபவர்கள் உரிய ஆவணங்களுடன் விசாரணைக்குச் சமுகமளித்தல் அவசியமாகும். இவ்விடத்தில் சரியான அஞ்சல் முகவரி கொடுப்பதன் முககியத்துவம் புரியும்,

(29) பாடசாலை விண்ணப்பங்கள பற்றிய தற்போதைய நிலை என்ன? இதற்குரிய சுற்று நிருபம் பிராந்தியக் கல்விப் பணிப்பாளருக்கும், மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கும், உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன இதன்படி 16 வயது பூர்த்தி அடைந்த மாணவ, மாணவிகள் மட்டுமே தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

(மிகுதி நாளை வரும்)

'ஈழமுரசு'' சாயிபாபா ஸ்தாபனத்தாரால் 37, கஸ்தூரியார் வீதி அவர்களது அச்சகப்பகுதியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள 24-02-1985 ஞாயிற்றுக்கிழமை தொலைபேசி: 23336: